# திராவிடநாடு

5—7—59 | வார வெளியீடு | விலை 16 காசு


## கணக்கு வை!

தமிழக்கனல்

காட்டிக்கொ டுப்பவர் எத்துணைவர்?—நாட்டின்
கங்காணி வேலையர் எந்துணைவர்?—தாய்
நாட்டின்ந லன்தனை மூச்செனவே—கொண்ட
நல்லவர் வல்லவர் எத்துணைவர்?—வெறும்
ஆட்டுமந் தைபோல்இ ருப்பவர் யார்?—பிறர்
ஆட்டும் பதுமைபோல் ஆடுபவர் யார்?—என்று
கூட்டிக்க ழித்துக்க ணக்கெடுத்து—தம்பி
தக்கபடி கூலி தந்திடுக!

நம்மைவ ளர்த்திடும் நம் நாட்டைத்—தமிழ்
நாடெனக் கூறுக என்றுரைத்தோம்!—ஆனால்
பொம்மைய மைச்சரும் காங்கிரசும்—அது
பொல்லாது என்றனர் சட்ட மன்றில்!—மிகச்
செம்மையாய் ஆட்சிமொ ழிதமிழே—என்று
செப்புவர்! ஆனால்க லெக்டர், போலீசு—இவை
தம்மைத்த மிழ்ச்சொல்லில் மாற்றுவதே—மிகத்
தப்பென்றார்! என்னக ணக்கு வைத்தாய்?

பாட்டாளி தோழர்தாம் என்றுரைத்தார்!—பணம்
பாழ்படும் என்றுதெ ரிந்திருந்தும்—குளிர்
ஊட்டியில் சட்டமன் றங்கூட—துடித்
தோடுவார் தம்மைக்க ணக்கிலே வை!—தமிழ்
நாட்டினில் ஆகாச வாணி யெனும்—சொல்லை
நீக்குக, வானொலி என்றுரைப்பீர்—என்று
கேட்டபின் னும்நிலை மாறவில்லை—இந்தச்
சேர்த்துக்க ணக்குவை! காலம் வரும்!!

# காங்கிரசில் சாராயவாடை!!

"கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு உதவி செய்துதான், சென்னை நகரசபைத் தேர்தலில் தி. மு. க-வினர் வெற்றி பெற்றார்கள்" என்று, செங்காக் கடைச் சீமானல்ல, தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குத் தலைமை தாங்கும் சிலர் இராசாராம் செப்பினாராம்! அதுவும் ஒரு பொதுக் கூட்டத்தில்!!

"உயரவேண்டுமானால், உன் சிந்தனையை உயர்த்து. பெருந்தன்மை பெறு" என்று சொல்லுவார்கள். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரிடம் நாம் பெருந்தன்மையை எதிர்பார்க்கவில்லை. என்றாலும், இப்படி, சாராயவாடைவரும் என்றும் நம்பவில்லை. ஓடியாடி, ஒவ்வொரு வீடாகப்போய், பொதுக் கூட்டங்கள் மூலம் உண்மைகளை எடுத்துச் சொல்லி, வோட்டுகளைச் சேகரிக்கக் கழகத்தின் தூய மணிகள், இரவென்றும் பகலென்றும் பாராது, தூங்காது, உண்ணாது, ஆற்றிய தொண்டின் திறனை நாமறிவோம். ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு "சாராயம்"தான் கவனத்துக்கு வருகிறது! சாற்றுகிறார் தைரியத்துடன்!!

தேர்தலில் தி. மு. க. வெற்றி பெற்றது என்பதை நினைக்கும்போது, எரிச்சல் குடைகிறதுபோலும்! எங்கே இந்த வெற்றிகண்டு, ஏனைய ஊர்களிலேயுள்ள மக்களும் காங்கிரசைக் கைகழுவிவிடுகிறார்களோ எனும் அச்சம் துளைக்கிறதுபோலும்! குடைச்சலையும் அச்சத்தையும் குறைக்கக் குறுக்குப் பாதை காண்கிறார்! வெற்றி பெறக் காரணம், கொள்கையல்ல, சாராயக் குடுவை என்று சாற்றுகிறார்!!

திறமையான போலீஸ் படையிருக்கிறது—அதை நிர்வகிப்பவர் திறன்மிக்க பக்தவத்சலம்—வெற்றிபெற்று வருகிறது மதுவிலக்கு—என்று, சர்க்காரின் சாதனையாகப் பேசிக்கொள்ளுவதுண்டு, இவர்கள். அந்தச் சர்க்கார் வாழும் சென்னை மாநகரில், சாராயம் காய்ச்சுகிறவர்களும், அப்படிக் காய்ச்சுபவர்களுக்கு உதவி செய்கிறவர்களும், உலவுகிறார்கள் என்றால், அதுவே வெட்கக்கேடு. அப்படிக் காய்ச்சுபவர்கள், ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் பெருகினர்; அவர்களே கவுன்சிலர்களையும் தேர்ந்தெடுத்து, கார்ப்பரேஷனிலும் அமர்த்தினர் என்று சொன்னால், சாராயம் பீப்பாய் பீப்பாயாக வீதிகளில் வழிந்தோடியிருக்கவேண்டும்! அப்படி வழிந்தோடுவதில் மிச்சம் மீதி நமக்குக் கிடைக்குமா என்று இராசாராமின் சகாக்கள் காத்திருந்தாலொழிய, கசடர்களைப் பிடித்து, தண்டித்திருக்க முடியும்!! ஏன் செய்யவில்லை திறமையில்லையா செய்ய? ஆமெனில், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகப் பீத்தித்திரியும் பெம்மான்களுக்கு என்ன வேலை சர்க்காரில்? மதுவிலக்குத் தோற்றது என்றாவது சொல்லவேண்டும், அல்லது மரியாதையாகவாவது மந்திரிப்பதவிகளை விட்டு இராஜினாமாச் செய்திருக்க வேண்டும்!!

சட்டமன்றத்தில் மட்டுமல்ல, பொதுக் கூட்டங்களில் கூட மதுவிலக்குக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் வழங்கும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அமைச்சர்கள் பாராட்டிப் பேசியிருக்கின்றனர். ஆனால், இராசாராம் சொல்கிறார் அப்படிப்பட்ட கழகம், கள்ளச்சாராயம்

**அண்ணல்**

காய்ச்சுகிறவர்களுக்குத் துணைபோயிற்று என்று!! கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு உதவினால், எம். எல். ஏ-யாகவும், கவுன்சிலராகவும் வரமுடியும் சென்னையில், என்பது இச்சீமானின் கருத்தாயின், கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் சார்பாக டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், யு. கிருஷ்ணாராவும் வெற்றி பெற்றார்களே இந்த, எப்படி? அவர்களும் கள்ளச்சாராயம் காய்ச்சுவர்களுக்கு உதவி செய்தனர் என்கிறாரா இத்திருமங்கலத்தார்? அப்படிச் செய்துதான், அரசுக் கட்டில் ஏறி அமர்ந்தனர் என்பதுதான் இவரது எண்ணமா!!

பொது வாழ்க்கையில் தூய்மையும், நற்பண்பும் உலவ வேண்டும் என்று உத்தமர்கள் எதிர்பார்க்கின்ற காலமிது. அதனால்தான், உத்தமர்கள், இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் நற்போக்குக்கண்டு வாழ்த்தவும் வரவேற்கவும் செய்கின்றனர். ஊராளும் கட்சியின் தலைவராக விளங்குபவருக்கு, மாற்றுக் கட்சிகளைவிட, மதிப்பும் பண்பும் இருக்க வேண்டும். அப்போதுதான் பொது வாழ்க்கையின் தரமும், பெருமையும் பெருகும். அன்பர் இராசாராம், இங்களவுக்கு, இறங்கி வந்து, இழிமொழியில் தேர்தல் விமர்சனத்திலீடுபடக் காரணம்; அவருடைய தரத்தைவிட, காங்கிரசின் தரம் மட்டமாகி விட்டதென்றே பொரு[illegible] இல்லையெனில், குறுக்குப்பாதை தேட வேண்டிய அவசியம் ஏற்படாது; குன்றுபோல நிமிர்ந்து நின்று, சரிகிறது காங்கிரஸ் கொள்கை, சந்து பொந்தெல்லாம் அதை நிலைநாட்டப் பாடுபடுவேன் என்று முழக்கமிடும் துணிவு ஏற்படும்!!

அன்பர் இராசாராமுக்கு மட்டுமல்ல, பல காங்கிரஸ் பிரமுகர்களுக்கே இப்போது, காய்ச்சல் வேகம் அதிகமாகி, 'ஜன்னி' காணும் கட்டம் உண்டாகி வருகிறது. இதனை ஒவ்வொரு ஊரிலும் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் இராசாராம் போன்றோர் பேசிடும் பேச்சுக்களைக் காணும் பொதுமக்கள் உணர்ந்தே வருகிறார்கள். பொதுக்கூட்டங்களிலே, ஐந்தாண்டுத் திட்டத்தின் அருமையைப்பற்றி விளக்குவதில்லை, அண்ணாதுரையின் வேட்டி ஆறு முழமா அஞ்சு முழமா என்பதை அளப்பதில்தான் ஈடுபடுகிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளிலே, இது சொட்டை, இது சொள்ளையென்று வாதிட்டு விளக்குவதில்லை; மாறாக, சாராய வாடையையும், சந்துமுனைச் சிந்தையும்தான், நம்புகின்றனர், தலைக்கு. காங்கிரஸ் கூட்டங்கள், நம்மைத் தாக்குவதற்காக நடைபெறுகின்றனவே ஒழிய, தங்கள் கொள்கைப் பிரச்சாரத்துக்கல்ல! கொள்கையென்று ஏதாவது இருந்தாலல்லவா பிரச்சாரம் செய்ய!!

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைகளுக்கு இன்றுள்ள கொள்கையெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தை, ஏசுவதுதான்—இதுதான், முதலும் முக்கியமான கொள்கையென்று, முளைவிடும் புதுத் தலையிலிருந்து, களையிழந்து வரும் 'கனம்' வரையில் கருதுகின்ற காரணத்தால்தான், தமிழ்நாட்டின் பொதுமேடையில், சாராய வாடை வீசுமளவுக்கு இன்று நிலைமை முற்றியிருக்கிறது! உண்மையில் சாராய வாடை எங்கே அதிகமாக வீசுகிறது 'பெர்மிட்' பெற்ற எத்தனை சீமான்கள் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சிக்குள்ளிருக்கிறார்கள்—கதர் சட்டையும் காந்திக் குல்லாயும் எதற்குப் பயன்படுகிறது என்பதை, தமிழ்நாட்டினர், நன்கு அறிவார்கள்.

காங்கிரஸ் வாழும் டில்லித் தலைநகரில், தினசரி காலன் கணக்கில் ஒயினும் விஸ்கியும் உடைபட்டுக் கொண்டிருப்பதை அறியார், யார்? இராணுவத்தில் இன்னும் மதுவாட்சி நடக்கிறதே—மறுக்க முடியுமா? மது

(13-ம் பக்கம் பார்க்க)

மலர் 17 ] ஆண்டுச் சந்தா ரூ. 8. (5—7—59) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 51

# ஆபத்தான ஏகாதிபத்தியம்!

பாகிஸ்தானத்திலிருந்தோ, பட்டாணிஸ்தானத் லிருந்தோ வந்தவர்களல்ல; பாரத மணித்திருநாடு ன்று பாடப்படும் இந்த உபகண்டத்தின் முடிசூடா ன்னர்கள்தான்! அறுந்து வீழ்ந்த தாலிகள், ஆப் ரிக்க தேசத்து மாதர்களுடையவையல்ல; அன்னை மியின் வண்ணமடியில் துயில்கொண்ட ர்களதுதான்! ஓலமிட்டு அழுத குடும்பங்கள், மான் கடலோரமிருந்து ஓரிரவுக்குள் இங்கே வந் வையல்ல! உயிரிருந்தும், உறுப்பிழந்தோராக, இன் றும் இங்கே உலவும் பல வாலிபர்கள் பராரிகளாக ந்தோர்களல்ல; பாட்டாளி வர்க்கத்தின் சின்னங் ள்தான்!—இவர்கள்மீது, ஆமதாபாத்திலும், பம்பா லும், தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும்—அண் மையில்—சென்னையிலும், துப்பாக்கிகள் சுட்டபோது, ச்சரங்கள் உதிரவில்லை! புண்ணாக்கி, உயிரையே மண் றக்கும் குண்டுகள்தான் உதிர்ந்தன!! அப்போதெல் ாம் துடிக்காத இதயம் துடித்திருக்கிறது—கண்கள் திறந்திருக்கின்றன — உள்ளம் குமுறியிருக்கிறது— றும் குரலில், 'ஐயகோ, அடுக்குமா?' என்று பாரிச் சுருட்டி எழுந்து—கண்டனமும் ஆத்திரமும் காட்டியிருக்கின்றனர்.

கடந்த கிழமை, கேரளத்தில் நடைபெற்ற துப் பாக்கிப் பிரயோகம் குறித்து, டில்லியிலே இந்தக் கிழமை கூடிய காங்கிரஸ் பார்லிமெண்டரிபோர்டு நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தையே குறிப்பிடு கிறோம்.

தீ பற்றியெரிகிறது என்று மக்கள் ஓலமிட்ட போது, தென்றலாகக் கருதும்படி செப்பிய காங் கிரஸ் கண்ணியர்கள், கேரளத்துத் துப்பாக்கிப் பிர யோகம் கண்டு, கண்ணீர் வடித்து, கம்யூனிஸ்டு அர சாங்கத்தைக் கண்டித்திருக்கின்றனர். இவர்கள் ஆட்சிப்பீடம் ஏறிய இந்தப் பதினொரு ஆண்டுகளில், மாண்டோர் தொகை ஏராளம்!

மண்ணில் பிணமென வீழ்ந்தோர் பலர்! பிரெஞ்சு ஆட்சியின் ஆட்சியில் கூட நடந்திராத சம்பவம் எனக் கருதத்தக்க அளவில் சேலத்துச்சிறைச்சாலைக் குள் 20-பேருக்குமேல், மடமடவெனச் சுட்டுத்தள்ளப் பட்டனர்; அப்போதும் இந்தக் காங்கிரஸ் பார்லி மெண்டரி போர்டு இருந்தது; இப்போது காங்கிரசை ஆட்டிப்படைக்கும்நேருவும்,பந்துவும், காமராசரும்அப் போதும் இருந்தனர்; ஆனால், கண்டித்தார்களில்லை! ஒரு அனுதாப மொழியேனும் உதிர்த்தார்களில்லை!! அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடுக என்று குரலெழுப்பியபோதும் இந்தக் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு, இருக்கத் தான் இருந்தது; ஏனென்று கேட்டதில்லை. அதே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த விருதுநகர் சங்கரலிங்க னார், தமிழ்நாடு என்று பெயர்வைக்கச் சொல்லி அணு அணுவாக உயிரைவிட்டு மாண்டார்; அப்போதும் இந்தப் பார்லிமெண்டரி போர்டு இருந் தது; சிறுசொல் சிந்தவில்லை! சிற்றூராம் 'டால்மியா புரத்தின்' பெயரைமாற்றச்சொல்கின்றனராமே,செய்து விட்டால் என்ன என்று, கட்சிக்கு அறிவுரை கூற வேண்டிய உயர்ந்த இடத்திலுள்ள இதே பார்லி மெண்டரிபோர்டு, 'மடியட்டும் பலர் மடிந்தால் என்ன? சாகட்டும்' என்றுதான் இருந்ததே ஒழிய; நம் குரலைக் கேட்டதாகக் கூடக் காட்டிக்கொள்ளவில்லை!! அப் படிப்பட்ட பார்லிமெண்டரி போர்டுக்கு, கேரளத்தில் ஆள்வது மாற்றுக்கட்சியான கம்யூனிஸ்டு; அது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்றதும், அன்பு வழிந்தோடியிருக்கிறது, ஆத்திரம் புரண்டிருக்கிறது, கண்கள் திறந்திருக்கின்றன, கூடியமர்ந்து கோல் பிடித்துத் தீர்மானம் தீட்டிக் கண்டித்திருக்கின்றனர். ஒவ்வொரு முறை துப்பாக்கிகளை வெடிக்கும்போதும், காங்கிரஸ் ஆட்சியாளர்கள், சொல்வதுண்டு, "கூட் டம் கட்டுக் கடங்காமற் போய்விட்டது. அமைதிக்காகச் சுடநேர்ந்தது" என்று. இதே விளக் கத்தைத்தான், கம்யூனிஸ்டு அரசாங்கமும் சொல் கிறது; ஆனால், கேட்கும் நிலையிலில்லை, டில்லிபீடம். மாமியார் உடைத்தால் மண்குடம்! மருமகள் உடைத்தால் பொன்குடம்!! என்பார்கள். பொதுவாழ் விலும், இந்தப் பாட்டிமொழி, உண்மையாகி விட்டது.

*

அரசுகள் தவறு செய்யும்போதும், தங்கள் விருப்பத்தை அரசுகளுக்குத் தெரிவிக்கும் அவசியம் உருவாகும்போதும், மக்கள் அறப்போரிலீடுபடுவ துண்டு. ஜனநாயக செங்கோலோச்சும் இடங்களில், மக்கள் தமது அதிருப்தியைக் காட்டுவதற்கெனப் பெற்றுள்ள ஒரே வழி இந்த அறப்போர்தான். மறி யல் செய்வது, கருப்புக்கொடி காட்டுவது, கடை யடைப்பு நடாத்துவது, கண்டன ஊர்வலம் நடத்து வது, பொதுக்கூட்டங்கள் போடுவது என்பவை, இந்த அறப்போரின் வகைகளாகும். காங்கிரஸ் ஆட்சியின் செயல்களின்மீது அதிருப்தியும் மனத் துயரும் உண்டானபோதெல்லாம், மக்கள் மன்றம், இந்த வகைகளில் இறங்கியதுண்டு! ஒருதடவைகூட, இந்த அறப்போர்களை, ஆளும் மாநில அரசுகளும் சரி, அவைகளை ஆட்டிப் படைக்கும் டில்லி பீடமும் சரி, அந்தப் பீடத்தை நிர்வகிக்கும் பெரிய தலைகளும் சரி, மதித்ததுமில்லை; பரிகாரம் தேடியதுமில்லை!! மாறாக; இவைகளை நசுக்க, இராணுவம் வேண்டுமா,

போலீஸ் வேண்டுமா என்று மட்டும் கேட்பதுண்டு. அப்போதெல்லாம், இந்த வகை அறப்போர்களைக் கண்டித்தவர்கள், இப்போது கேரளத்தில் நடக்கும் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்திருக்கின்றனர்! கம்யூனிஸ்டு அரசாங்கத்துக்கு எதிராக, தமது காங்கிரஸ் கட்சி, இந்த ஆர்ப்பாட்டங்களைச் செய்கிறது என்றதும் மனமுவந்து, இப்படித்தான் செய்யவேண்டும் என்கின்றனர், இதுதான் நல்வழி என்கின்றனர், இவ்வழி செல்க என்றும் உற்சாகமூட்டுகின்றனர்!!

எந்த மாநிலத்திலும், அறப்போர்கள், ஒரு குறிப்பிட்ட பிரச்னையை வைத்தே நடப்பதுண்டு. மொழி வழி மாநிலம் பிரிவினை வந்ததும், அதை வைத்து பம்பாயில் கிளர்ச்சி உருவெடுத்தது; இந்தி வேண்டாமெனத் தமிழகத்தில் உரிமைக் குரல் ஒலித்தது; தொழிலாளர்க்கு நியாயம் வழங்கு என்று வங்கத்தில் ஏற்பட்டது; விவசாயிக்கு நிலம்கொடு என்று ஐக்கிய மாகாணத்தில் நிகழ்ந்தது. ஆனால், இப்போது, கேரளத்தில் **சர்க்காரையே சாய்க்கும்** நோக்குடன் காங்கிரஸ் தொடர்ந்திருக்கிறது. இதுநாள் வரை, எந்த மாநிலத்திலும், எந்த எதிர்க் கட்சியும் இப்படி "சர்க்காரே, வெளியேறு!" என்று ஒரு பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதில்லை. ஏனெனில், அடுத்த பொதுத்தேர்தல் வரும்போதுதான் அரசை மாற்ற முடியும், அதுவரையில் நமது விருப்பங்களை வற்புறுத்தித்தான் அரசிடமிருந்து பெற முயலவேண்டும் என்கிற அடிப்படை விதியை மாற்ற, எந்த எதிர்க் கட்சியும் முனைந்ததில்லை. இப்போதும், கேரளத்து மூலம், வழிவகுத்துக் கொடுக்கிறது காங்கிரஸ்! எம் மாநிலத்திலும், திடீரென, 'மந்திரிகளே விலகுங்கள்,' 'மறு தேர்தலை உடனே நடத்துங்கள்,' என்று எதிர்க் கட்சிகள், கிளர்ச்சிகள் துவங்கலாம்; இதுநாள் வரை, ஜனநாயகத்திலும், தேர்தலிலும் நம்பிக்கை வைத்திருந்தோர், அந்த நம்பிக்கையை அறுத்துக் கொள்ளும் ஆரம்ப விழாவை, ஜனநாயக முறைக்கு சாவுப்பெட்டி தயாரிக்கும் விழாவைத் துவக்கம் செய்து தந்திருக்கிறது டில்லி.

பிடிக்காத கட்சி ஆட்சியில் அமர்ந்துவிட்டதென்றால், உடனே எந்த எதிர்க்கட்சியும் தன் வலிவுக்குத் தக்கபடி, பலாத்காரத்தாலோ, பயமுறுத்தலாலோ, நாட்டின் அரசைக் கவிழ்க்கலாம்; கவிழும்படி கிளர்ச்சி செய்யலாம்; அடுத்த பொதுத்தேர்தல் வரும்வரை காத்திருக்கவேண்டியதில்லை—அந்த அரசியல் நெறி தேவையில்லை என்கிற சூழ்நிலையை, காங்கிரஸ்பீடம் உருவாக்கிவிட்டிருக்கிறது, இந்தக்கிழமை. நேரு, பந்த், தேபர், இந்திரா போன்ற ஜனநாயகம் பேசும் சன்மார்க்க சீலர்களே, இதற்கு வித்திட்டு, வழிகாட்டி அனுப்பிவைத்திருக்கிறார்கள், கேரளத்துக் காங்கிரஸ்காரர்களை! சொந்தக் கட்சியென்றதும், அடடா, அதர்மம் தர்மமாகிறது, அக்கிரமத்துக்கு ஆரம்ப விழா செய்யப்படுகிறது, எப்படியாவது காங்கிரசை நிலைநாட்டு என்று சொல்லியனுப்பப்படுகிறது!!

•

கம்யூனிசத்தை வேரறுக்க அமெரிக்கா விரும்புகிறது; ஐரோப்பாவில்—ஆசியாவில் — ஆப்பிரிக்காவில் எங்கும் அக்கொள்கை பரவாமல் பாதுகாக்க வேண்டும்என்று பரபரப்புக்காட்டுகிறது. கம்யூனிசப் பாதைக்கு சோஷியலிச மாடல் வழியாகச் சென்று சுகபூமியை உருவாக்கப்போகிறோம் என்று சொல்லும் இந்தச் சுதந்திர வீரர்களே, கேரளத்து விஷயத்தில் இவ்வளவு ஆத்திரமும் அக்கரையும் காட்டுகின்றனர் என்று எண்ணும்போதுதான், உலகத்துக்கே ஜோதியானாலும் ஊருக்கே நீதிபதியானாலும் சொந்த விஷயம் எனும்போது எவரும் சுயநலவாதியாகிவிடுகிறார்கள் என்கிற உண்மை விளங்குகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே, ஒரு எதிர்க்கட்சி ஆட்சி ஏற்பட்டதென்பது, கேரளத்தில்தான்! இங்கே கம்யூனிஸ்டுக் கட்சி ஆளுகைக்கு வந்ததென்றால், கட்சிப் பாகுபாட்டிற்கு அப்பாற்பட்ட கர்த்தர்கள்போல நேருவும் பந்துவும் தங்களைக் காட்டிக்கொண்டனர் — கேரளத்து அரசை அங்கீகரித்தனர். ஆனால் இப்போது, அடுத்த பொதுத்தேர்தல் வரையில் காத்திருப்போம் என்றிராது, "இன்னொரு பொதுத்தேர்தல்" என்று சொல்லுகின்றனர். இதற்கு அவர்கள் காட்டும் காரணம், கம்யூனிஸ்டு அரசாங்கம், மக்களின் அதிருப்தியைப் பெற்றுவிட்டது என்பதுதான்! அந்த மக்கள் யாரென்றால், காங்கிரசினர், பிரஜா சோஷியலிஸ்டுகள், கத்தோலிக்கர்கள் போன்றவர்கள்!! நிச்சயம், இந்த மக்களின் வோட்டுகள், தேர்தலின்போது கம்யூனிஸ்டுகளின் பெட்டிகளில் விழுந்திருக்காது. கம்யூனிஸ்டுகளை விரும்பி ஆதரித்தவர்களுடைய மனநிலை எப்படியிருக்கிறது என்பதற்கு இக்கட்சிகளுடைய எதிர்ப்பு மட்டும்அளவுகோலாகிவிட முடியாது. ஆயினும், காங்கிரஸ் மேலிடம், ஆரம்பத்தில் நல்லவர்போல் காட்டிக் கம்யூனிஸ்டுகளையும் அரசில் ஏறியமரச்சொல்லி, இப்போது அவர்கள்மீதே பழியைப்போட்டு, தங்களது கட்சிக்கு ஆதரவு திரட்டப் பார்க்கிறது! காளி கோயிலுக்குப் பலியிடுமுன் ஆட்டுக்குத் தழை கொடுப்பது போலக் கொடுத்து, ஒரே வெட்டில் வெட்டி வீழ்த்துவதுண்டல்லவா, அதுபோல!!

உள்நாட்டுப்போர் என்று உலகம் கருதவேண்டிய அளவுக்கும், ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு மடிகிறார்கள் என்று மற்ற மாநிலக்காரர்கள் கருத வேண்டிய விதத்திலும், கேரளத்து நிகழ்ச்சிகளுக்குப் பரபரப்பும் முக்கியத்துவமும்கொடுக்கப்பட்டிருக்கிறது இன்று. பம்பாயிலும் அகமதாபாத்திலும் இரத்த ஆறே ஓடியது! வேறெதற்குமல்ல, மொழிவழி மாநிலம் பற்றி. "முடியாது. சொன்ன சொல்லை மாற்றமாட்டேன்," என்று பிணங்கள், தரையில் உருண்டபோது கூடப் பிடிவாதம் காட்டியவர் நேரு பண்டிதர். இப்போதோ, ஓடிவருகிறார், உடனே டில்லி போகிறார், காங்கிரஸ் தலைகளைக் கூட்டுகிறார், கர்ச்சியுங்கள் போய் என்று அனுப்புகிறார்.

எதையும் சாவதானமாக—அலட்சியத்தோடு—ஆராயும் காங்கிரஸ்மேலிடம், கேரளத்துப் பிரச்னையில் மட்டும், ஏன் தங்கள் கட்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டு கொட்டமடிக்கவேண்டும்? மகளைத் தலைவியாகக் கொண்டுள்ள கட்சிக்கு, புதுச் செல்வாக்குத் தேடவா! மகளுடைய தலைமைப்பதவியின் காலத்தில், 'இழந்த இடங்கள் மீண்டன' என்கிற கித்தாப்பை நிலைநாட்டிக்கொள்ளவா!! எதற்கு இவ்வளவு பரபரப்புக் காட்டவேண்டும்?

நேருவுக்குப் பாதந்தாங்கியாகிவிட்ட ஒருவர், **"கேரளத்தையே அழித்துவிடவேண்டும். இரண்டு துண்டாக்கி ஒன்றைச் சென்னையுடனும், இன்னொன்றை மைசூருடனும் சேர்த்து விடவேண்டும். இல்லாத வரையில், கேரளத்துத் தலைவலி தீராது"**, என்கிறார். அந்தளவுக்கு, வடவர்களுக்குக் கேரளம் என்ன தீங்கு செய்தது?

(15-ம் பக்கம் பார்க்க)

தமிழோசை-6

# மலேயாவில் நாம்

இந்தியத் துணைக்கண்டத்தின் முதலமைச்சராக இப்போது காட்சி தரும் நேரு அவர்கள் தமது 'உலக சரித்திரம்' எனும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்:

"ஆதிகாலத்திலேயே தென்னிந்தியர்கள் துணிச்சலுடன் வங்காளக்குடாக்கடலைக் கடந்து மலாய் நாட்டுக்கும் அதற்குத் தெற்கிலுள்ள தீவுகளுக்கும் சென்றிருக்கிறார்கள்."

இங்கு, "ஆதிகாலத்திலேயே'... என்னும் சொற்றொடர் பன்னெடுங் காலத்திற்கு முன்பே என்னும் கருத்துடன் கையாளப்பட்டிருத்தலைக் காண்க. 'தென்னிந்தியர்கள்' என்று குறிப்பிடுவது தமிழர்களையே.

அன்று அரபிக்கடல் சேரமன்னரின் கடற்படைத் தளமாக விளங்கியது. அப்போது அதன் பெயர் சேரன் பெருங்கடல். ஒரு பாண்டிய மன்னன் ரோமாபுரி அரசரான அகஸ்டஸ் சீசர் ஒக்டேவியுஸ் [கி. மு. 20] என்பவருக்குத் தூதர்களை அனுப்பினான். வேறொரு பாண்டியன் குபிலைகான் கி. பி. 1216—1294 என்னும் பெயர் கொண்ட சீனச் சக்கரவர்த்திக்குத் தூதர்களை அனுப்பினான்.

அக்காலத்திலே தமிழரின் நாகரிக மேன்மையும் நாடாளும் நன்முறையும், பண்பு நலனும் போர்த்திறமும், கலைச் சிறப்பும், கைவினை நுட்பமும் கண்டு மேதினி வியப்புற்றிருந்தது. தமிழகத்தின் வாசனைப் பொருட்களும் துணிமணிகளும், வைரமும் முத்தும், அகிலும் தேக்கும், அரிசியும் மயில் தோகையும், யானைத் தந்தமும் எண்டிசைத் தேயங்களாலும் அளவிலா ஆர்வத்தோடு வரவேற்கப்பட்டன. தமிழர் உயிரோடு — உயிர்ப்போடு வாழ்ந்திருந்த காலம் அது.

தமிழரின் நாவாய்கள் ஏழு கடல்களிலும் ஓடிக்கொண்டிருந்த அக்காலத்திலேதான் வளமுடைய இம் மலேயா மண்ணில் தமிழர் காலடி வைத்தனர். மலேயாவைத் தமது மற்றொரு தாயகமாகக் கொண்டனர். இரு நாடுகளும் ஒன்றோடொன்று பலவகையில் தொடர்பு பெற்றன.

**இத் தொடர்பு ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டதென்று ஆராய்ச்சியாளர் தெரிவிக்கின்றனர்.**

மலையமலை என்பது பொதிய மலையின் மறு பெயர். அதை நினைவு கொள்ளும் பொருட்டே தமிழர் இந்நாட்டை மலேயாவென்றழைத்தனர். ஒரு தமிழரசன் மலையமான் திருமுடிக்காரி என்னும் பெயர் பூண்டிருந்தது இங்கு கவனிக்கத் தக்கது.

மலேயாவின் பெரிய நகரங்களிரண்டும் தமிழ் நாட்டு முறைப்படி ஊர் எனவே இன்றும் வழங்குகின்றன. அவற்றில் ஒன்று சிங்கப்பூர் என்ற பெயரில் இன்றும் வழங்கப்படுகிறது.

பாய்மரக் கப்பல் கலத்தில் இத் தீவை வந்தடைந்த நீல உத்தமன் இங்கு முதன் முதலாகக் கண்டது

**சிங்கப்பூர் வள்ளிமணாளன்**

சிங்கப்பூர் 'தமிழ் முரசு' மலர் மூலம் தந்த கருத்து.

ஒரு சிங்கம் எனவும், அதனால் சிங்கம் வசிக்குமிடமென்னும் பொருள்படச் சிங்கப்பூர் என்று பெயரிட்டழைத்தானென்றும் ஒரு மலாய் வரலாறு தெரிவிக்கின்றது.

வரலாற்றுப் புகழ் படைத்த மன்னர் மன்னன் இராச இராச சோ[illegible] வழித்தோன்றல்களில் ஒருவனே நீல உத்தமன். இராச இராச சோழனின் புதல்வன் இராசேந்திர சோழன், தந்தையையும் மிஞ்சிய மாவீரனாய்த் திகழ்ந்தான். வலிமை வாய்ந்த கடற்படையைக் கொண்டிருந்த அவனுடைய வெற்றிக்கொடி தமிழகத்திலும், கங்கைக் கரையிலிருந்த சில இராச்சியங்களிலும், அந்தமான், நிக்கோபார் முதலிய தீவுகளிலும், இலங்கையிலும், பர்மாவிலும், மலேயா, ஜாவா, சுமத்ரா, இந்தோ-சீனமுதலிய நாடுகளிலும் பட்டொளி வீசிப் பறந்தது: அதனாற்றான் அவனை இன்றைய வரலாற்றாசிரியன்மார் 'தமிழ்நாட்டு நெப்போலியன்' எனப் புகழ்கின்றனர். இராசேந்திர சோழனின் பெருந்தன்மையைப் பின்வரும் ஒரு நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

இன்று 'கிட்டா'வென வழங்கும் காழகத்தைக் கைப்பற்றிய பின் அந்நாட்டு மன்னனின் பரிதாப நிலைக்கு இரங்கி, அதை அவனுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டான். இராசேந்திரனின் ஆட்சிக்காலம் கி. பி. 1012லிருந்து 1043 வரை நீடித்திருந்தது.

அறிஞர் ரோலண்ட் பிராடெல் கூறுகிறார்: "மலேயாவுலகிற்கு முதன் முதலாக நாகரிகத்தை அளித்தது இந்தியாவே. தென்னாட்டுத் தமிழர்கள்தான் பழைய காலத்திலேயே இந்தியாவின் தலைசிறந்த மீகாமன்களாக விளங்கினர்" என்று.

மலேயாவிற்கு நாகரிகம் தந்தது இந்தியாவென்று அவர் கூறுகிறார். ஆனால் "இந்தியாவுக்கு நாகரிகம் வழங்கியது திராவிடம். திராவிடத்தில் வாழ்ந்த திராவிடரே உலகில் முதன் முதலாக நாகரிகம் பெற்று உயர்ந்தநிலையில் இருந்தோராவர்" என்று சிலேட்டர் என்பவர் அறுதியிட்டுக் கூறியுள்ளார். இக் கருத்தையே பெரும்பாலான வரலாற்றாசிரியர்களும் ஆராய்ச்சி வல்லு

(7-ம் பக்கம் பார்க்க)

# ஆட்சி நடக்கிறது!

—(ச. வெ. பாண்டியன்)—

அவரோ வாழ்ந்து கெட்டவர்! வறுமையோ தேளாகக் கொட்டியது! வேலையோ கிடைக்கவில்லை. நாயாக அலைந்ததுதான் மிச்சம்!

"எங்கள் குடும்பமோ மிகப் பெரிது'' என்று கூறத்தக்க பெருமையுடையது! ஆம்! எட்டுப் பெண்கள்! இரண்டு ஆண்கள்! பெண்கள் கன்னிப் பருவத்தை அடைந்தவர்கள்! இவர்களுக்குத் 'திருமணம்' நடத்திப் பெரும் பாரத்தைக் கீழே இறக்கவேண்டும்!

வாழவே "ததிங்கிணத்தோம்'' போடும் குடும்பத்தில், அப்துல் கனியால் எப்படிக் கலியாணத்தை இலகுவில் முடிக்க முடியும்? அதுவும் 'திருமணம்' செலவில்லாமல் நடந்துவிடக்கூடியதா என்ன? இல்லாதவனாக இருந்தாலும் பெண் கேட்க வருபவர்கள் பெண்ணோடு "பொன் பொருள்'' என்ன போடுவாய் என்று கேட்கும் காலமல்லவா இது!

அப்துல்கனிக்கு வாழ்க்கையை நடத்துவதற்கே திண்டாடிக் கொண்டிருக்கும்போது, இப்பாரம் வேறு! பாவம்! என்ன செய்வார்! திண்டாடினார்; தேம்பினார்! என்றாலும் எப்படியாவது ஒரு மகள் கலியாணத்தையாவது முடித்துவிடுவது என்று "பகீரதப் பிரயத்தனம்'' செய்யலானார்!

ஒருவரிடம் 'கடன்' கேட்டார்! அவரும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்! அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. திருமணம் முடிந்துவிட்டதாகவே கருதிக் களிப்புற்றார்!

மணமகன் ஒருவனைத் தேடிப் பிடித்தார்! பெண்பார்க்கும் படலம், பரிசப்படலம் எல்லாம் ஒருவாறு முடிந்தது. திருமண நாளும் குறிக்கப்பட்டது. மண நாள் நெருங்கிக் கொண்டே வந்தது! நகைகள் பேசியபடி போடவேண்டுமல்லவா? அதற்காகக் கடன்கொடுக்க ஒப்புதல் தந்தவரிடம் நடையாக நடந்தார்! "இந்தா, இந்தா'' என்று நாளும் கடந்துவரலாயிற்று.

நாளைக்குத் திருமண நாள்! அப்துல்கனியின் கையில் பணமோ கிடைக்கவில்லை! ஓடோடியும்போய் மீண்டும் கேட்கலானார்! ஒப்புக் கொண்டவர் "இல்லை'' என்று பதில் சொல்லிவிட்டார்!

அப்துல்கனிக்கு வீடு இடிந்து தன் தலையில் விழுவதுபோல் இருந்தது. பேந்தப் பேந்த விழித்தார்! பாவம்! ஏழை! பணம் யார்தான் நம்பிக் கொடுப்பார்கள்? "நாளைக்கு...மணநாள்! நான்பெற்ற மகளுக்கு திருமண நாள்!...ஐயோ என்செய்வேன்'' என்று வேதனையுற்றார்!

நாளைக்கு மாப்பிள்ளை வீட்டார் வரும்போது சொன்னபடி ஒரு நகையும் போடாமல் எப்படி இருப்பது? எப்படி அவர்கள் முகத்தைப் பார்ப்பது? கேவலம்... கேவலம்...நானும் ஒரு மனிதனா? இப்படிப்பட்ட எனக்கு வாழ்வெதற்கு? என எண்ணி மனம் உடைந்தார்.

முடிவு...? மகளின் திருமணத்திற்கு முன்தினம் அடுத்தவீட்டுக் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்! எங்கு நடந்தது என்றுகேட்கிறீர்களா? வேறு எங்கு நடக்கும்? நமது "புண்ணிய சீலர்கள்'' ஆளும் நாட்டில்தான் இது நடந்திருக்கிறது! கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த "செங்கவிளையில்'' தான் இச்சம்பவம் நடந்திருக்கிறது!

வேதனை நெஞ்சைப் பிளந்துவிடும்போல் இருக்கிறது என்றார்கள்! ஆனால் அதே தினத்தில் (மே. 5-ல்) அதே மாவட்டத்தில் "மார்த்தாண்டம் சமீபம்'' மேலும் ஓர் கோரச் சம்பவம் நடந்துள்ளது! வறுமையின் கோரவாய்க்குப் பலியான ஒரு வாலிபனின் வரலாறு நம் சோகத்தை மீண்டும் அதிகப்படுத்துகிறது!

கமலன்—அழகான பெயர் என்பீர்கள்! ஆனால் அவர்தான் அந்தக் கொடுமைக்கு ஆளான 25-வயது வாலிபர்! நமக்கு அழகாகத் தோன்றும் அவர் பெயர், அந்த வறுமைப் பேய்க்கு ஏனோ அழகாகத் தெரியவில்லை. இன்றேல் அவரைப் பலிவாங்கியிருக்குமா?

கமலன் ஓர் அச்சகத்தின் அச்சுக் கோர்க்கும் வேலைபார்த்து வந்தார். சம்பளம் மாதம் 25: தாய், தந்தையர் இருவரும் மகன் படும் துன்பத்தைக் காணக்கூடாது என்று தானோ என்னவோ தெரியவில்லை, கண்களை மூடிவிட்டனர்! அவருக்கு மூன்று சிறிய தம்பிகளும், ஒரு தங்கையும் உண்டாம்! இந்த 'ஐவர்' கொண்ட குடும்பம் 25-ரூபாயில் தான் காலம் தள்ளவேண்டும்! எப்படி முடியும்?

கால்பட்டினி, அரைப்பட்டினி, பின் முழுப்பட்டினியாக எப்படிக் காலம் தள்ளமுடியும்! வேறு வேலை கிடைப்பதற்கும் வழியில்லை! வருமானம் கூடுவதற்கும் மார்க்கம் இல்லை! வேலைக்கோ அவர் தயார் தான்! ஆனால் கிடைக்க வேண்டுமே!

இந்த வருத்தத்திற்கு முடிவு கட்ட ஒரு திட்டம் தீட்டினார்! ஆமாம்! அன்று இரவு "நாடோடி மன்னன்'' சினிமாப் பார்க்கச் சென்றார்! எப்படித் தெரியுமா? மாப்பிள்ளைக் கோலத்தில்! புத்தாடை புனைந்து புது முறுக்குடன் சென்றிருக்கிறார்! வாழ்க்கையில் இன்றாவது மகிழ்ச்சியாக இருப்போம் என்று எண்ணத்தினால் போலும்! "ஏழைகள் துயரம் எப்போது ஒழியும்'' என்பதை படத்திலாவது பார்த்துக்கொள்வோம் என்பதற்காகத்தான் "நாடோடி மன்னன்'' பார்க்கச் சென்றாரோ என்னவோ?

படம் முடிந்ததும் தூக்கிட்டுக் கொள்ளக் கயிறு ஒன்றை வாங்கியிருக்கிறார்! எல்லோரும் தூக்கத்திலிருந்த சமயம் ஒருமரத்தில் தூக்

கிட்டுத் தற்கொலை புரிந்துகொண்டார். எல்லோரும் தூக்கத்தில் துன்பத்தை மறந்திருந்தபோது, இவர் தூக்கிட்டுத் துன்பத்தை மறந்து விட்டார்!

இச் செய்தியைக் கேட்கக் காதுகளும் இருக்கின்றனவே, படிக்கக் கண்களும் இருக்கின்றனவே...... என நொந்துகொள்வோம் நாம்! நெஞ்சு வேகிறது, இவ்வநியாயத்தைக் கேட்கும்போது!

இவ்விரண்டு செய்திகளையும் தந்த தின இதழ் வறுமைக்குப் பலியானவர்கள் இவர்கள் மாத்திரம் இல்லை, இதோ இன்னும் ஒன்று என மீண்டும் ஒரு சோகச் செய்தியைத் தருகிறது!

இச்சம்பவம் விருதுநகரில் நடந்திருக்கிறது! காமராசர் ஊரிலா என்கிறீர்களா? ஆமாம்! கனம் காமராசர் ஆட்சியே அப்படித்தான்என்பதற்குச்சிறந்த எடுத்துக்காட்டாகக் கூடிய தன்மையில் தானே என்னவோ தெரியவில்லை! அவர் பிறந்த ஊரிலேயே இது நடந்திருக்கிறது!

“மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்றெல்லாம் பாடுவார்களே புலவர்கள்; அந்தப் பெண் குலத்திற்குக் கிடைத்த கதியைப் பாருங்கள்! அந்த அம்மையார் பெயர் “இராஜாத்தி!'' ஆம்! வறுமையின் வாய்க்குள் நுழைவதற்கு அவர் இராஜாத்திதான் போலும்!

அம்மையாருக்கு வயது 34. இத்தனை வயதுவரை வறுமையுடன் போராடி வாழ்ந்திருக்கிறார்கள்! வறுமையை எதிர்த்து நடத்திய போராட்டம் அம்மையாரின் 34-ம் ஆண்டோடு முடிந்துவிட்டது! வறுமை வெற்றி கண்டுவிட்டது!

தன் உடலில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீவைத்துக் கொண்டார்களாம்! வாழ முடியாதவர்களுக்கு உடம்பா பெரிது! கடைசியில் வெந்து செத்திருக்கிறார்கள்!

கோர நிகழ்ச்சிகள் என்போம்.

இந்த மூன்று பரிதாபத்திற்குரிய சம்பவங்களும் 9—5—59-ம் தேதிய “தினமணி''யில் வந்துள்ளது! ஒரு நாளில் இப்படி மூன்று கோரக் காட்சிகள்! இப்படி நாளும் நாளும் கவனித்து வந்தால் எத்தனையோ நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பது எளிதில் தெளிவாகும்.

நாடு இன்று இருக்கும் அவல நிலைக்கு இது ஒரு சான்றாகும்!

அமைச்சர்கள் பவனிவந்து கொண்டுதான் இருக்கிறார்கள்! “உதகை'' சென்றதும் உங்களுக்கு உழைப்பதற்காகத்தான் என்று வேறு பேசிக்கொள்கிறார்கள்!

“அகில உலகப் புகழ் பாரீரோ'' என்று பெருமையோடு பேசுகிறார்கள்!

ஆனால் ஏழைகள் வாழ வசதியில்லை—செத்து மடிகிறார்கள்!

வறுமை அவர்களை வாட்டி, உயிரைப் பிய்த்து தின்கிறது!

★

5-ம் பக்கத் தொடர்ச்சி

நரும் உறுதிப்படுத்துகின்றனர். மோகஞ்சோதாராவிலும் ஹாரப்பாவிலும் புதையுண்டு கிடக்கும் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் இன்னபிற அடையாளங்களும் அவர்கட்குத் தெளிவுமிக்க சான்று தருகின்றன. ஆகவே மலேயாவில் பரவிக் கிடப்பது தமிழரின் நாகரிகமே,

**மலேயாவில் தங்கம் விளைவதைக் கண்டவர்கள் தமிழர்களே. பேராவைச் சேர்ந்த பத்தாங் பாடாங், பாகாங்கைச் சேர்ந்த மவுண்ட் ஒபிர் முதலிய இடங்களில் முன்னாளில் தமிழர்கள் தங்கம் எடுத்தார்கள் என்பதை வரலாறு காட்டுகின்றது.**

வேடுவராகவும் மீன் பிடிப்போராகவும் நாகரிகமற்றவர்களாகவுமிருந்த மலேய மக்கள், நாகரிக வாழ்க்கையின் முறைகளைத் தமிழரிடமிருந்தே அறிந்தனர்.

ஏர் உழுதல், பாசனஞ் செய்தல், பயிரிடுதல் முதலிய சீரிய தொழில்களைத் தமிழரிடமிருந்தே கற்றுக் கொண்டனர்.

வாணிப முறைகள், நாணயத்தின் உபயோகம், இருப்பு ஆயுதங்கள் செய்தல், பொன், வெள்ளி இவற்றால் ஆபரணங்கள் செய்தல், வீடு கட்டுதல், மருத்துவ நூல் ஆகியனவும் தமிழர்களாலேயே மலேய மக்களுக்குக் கற்பிக்கப்பட்டன.

பட்டைகளை உடுத்திய மலேயர் பருத்தி ஆடையும் பட்டுப்புடவையும் நெசவு செய்து அணியப் பயின்றார்கள்.

'மலாய் மொழியில் வழங்குகின்ற சமய சம்பந்தமான பதங்கள், வியாபாரத்திற்குரியபதங்கள், வேளாண்மைப் பதங்கள், ஆயுதங்களின் பெயர்கள், இசைக் கருவிகளின் பெயர்கள், யுத்தப் பதங்கள், அரசியல் வார்த்தைகள், வானசாஸ்திர சம்பந்தமான பதங்கள், பிராணி, தாவர வர்க்கங்களைக் குறிக்கும் சொற்கள் இன்ன பிறவும் தமிழ் அல்லது தமிழில் கலந்து வழங்கும் வடமொழிப் பதங்களே.

மலேயா சமஸ்தானங்கள் சிலவற்றில் முடிசூட்டு விழாக்களும் முறைகளும் தமிழரின் முறையையொட்டியே இன்றளவும் நிகழ்ந்து வருகின்றன.

தமிழரிடமிருந்தே மலேய மக்கள் வாழும் வகை கற்றனர்; வாழும் வழி கண்டனர். தமிழரின் சீரிய உழைப்பினாலே மலேயா வளமிகு நாடாகியது. வானளாவும் மாளிகைகளும் வழவழப்பான நீண்ட சாலைகளும் தமிழர் கொட்டிய வியர் வையினால் தான் உருவாகின.

தமிழரின் நாகரிகமும் மொழியும் கலையும் மலேயா முழுவதும் பரவிக் கிடக்கின்றன வென்று மேற்போக்காகச்சொல்வதும்-மேற்போக்காகக் கேள்விப்படுவதுமட்டும் போதாது. இவ்வுண்மையின் ஆழமும் இறுக்கமும் எத்தன்மை கொண்டிருக்கின்றன வென்பதை ஒவ்வொரு தமிழனும் கருத்தூன்றி ஆராய்வதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். ஆராய்ந்து கண்டு அவற்றை பிற இனத்தார்க்கும் எடுத்துரைக்கவேண்டும்.

★

**உலகம் என்பது கானல் நீர் அல்ல. இது ஒரு கடல், இந்தக் கடலில் நீந்துவதும், அமிழ்ந்துபோகிறவர்களுக்கு கைகொடுப்பதுமே நம் வேலை.**




## 6

ஸ்ரீமான் சிங்காரவேலரிடம் வந்துற்ற இன்னல்களுக்கெல்லாம் காரணம் 'பிராப்தம்!' தான் என்று ஆறுதல் கூறி 'நானிருக்கப் பயமேன்' என்று சமாதானம் சொல்லி, வரகூர் மிராசுதாரரின் நில புலன்களின் அகல நீளங்களோடு மதிப்பையும் சொல்லி, அவருக்கிருக்கும் செல்வாக்கை வர்ணித்து, அவருக்கு இருப்பது ஒரே பிள்ளை, பெயர் திருஞானம் என்று கூறி, அந்த மிராசுதாரர் வீட்டுக்குப் பூங்கோதையை மருமகளாக்கத் தான் எண்ணுவதாக இதமாகக்கூறி, பையனுக்கு மோகினி பிடித்திருப்பதாயும், அதனால்தான் சிறிது புத்தி தடுமாற்றம் இருக்கிறது; திருமணம் நடந்தால் எல்லாம் மங்களமாக முடியுமென்றும் முடித்தார் சாஸ்திரி. எப்படியாவது தன்மகள் கன்னி கழிந்தால் போதுமென்ற ஆசையால் தயங்காது சம்மதம் தந்தார் சிங்காரவேலர். சாஸ்திரியாருக்கு சன்மானங்கள் தருவதாகவும் உறுதி தந்தார்.

முறைப்படி பெண் கேட்க, பட்டுலிங்கம்பிள்ளை வருவதாகச் சிங்காரவேலருக்குக் கடிதம் வந்தது. கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஆலோசனையில் ஆழ்ந்தார். கிலி நிறைந்த அவர் நெஞ்சில் எண்ணற்ற பயங்கரப் போராட்டங்கள் எழுந்தன. பழைய சம்பவங்களை யாராவது பட்டுலிங்கம் பிள்ளையிடம் சொல்லி, இந்தத் திருமணம் நடக்காதவாறு செய்துவிடுவார்களோ என்ற பயம் அவர் நெஞ்சில் பெரும் புயலைக் கிளப்பியது. தன் மகள்மீது பித்துப் பிடித்துத்தெருத்தெருவாய்த் திரியும் கண்ணனைப்பற்றிய நினைவு வந்தது. இன்னும் வேதனையுற்றார். இந்தத் திருமணமும் தடைபட்டால், தான் உயிரோடு வாழவே முடியாதென்பதை உணர்ந்தார். உலாவினர்... நெடுநேரம் யோசித்தார். தன் மானம் பறிபோனதற்குக் காரணமாக இருந்த கண்ணனைப்பற்றிய எண்ணம் அவர் நெஞ்சில் எழும்போதெல்லாம் கொதிக்கும் எண்ணெயைக் கொட்டிக் கொண்டவர்போல் துடித்தார். வேதனை அவரை வெறியனாக்கியது. "கண்ணனை யாராவது பட்டுலிங்கம்பிள்ளையிடம் காட்டிவிட்டால்...அல்லது இந்தத் திருமண ஏற்பாடு தெரிந்து பட்டுலிங்கம் பிள்ளையிடம் கண்ணன் போய் விட்டால்... என்ன செய்வது?'' இந்தக் கேள்விக்குப் பதில்காண நெடுநேரம்யோசித்தார்.கடைசியாக ஏதோ தீர்மானத்தோடு இரும்புப் பெட்டியைத் திறந்து பணம் எடுத்துக்கொண்டு கிளம்பினர் வெளியில். சந்தித்தார் கேடி கந்தசாமியை. அச்சாரம் தந்தார்! வீடு வந்தார்!

சென்னையில் மங்களத்தின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கண்ணம்மா தன் அண்ணனுக்குத் தந்திகொடுத்திருந்தாள். தந்தியைப் படித்ததும் கண்ணன் கலங்கினன். தாயைக் காணவேண்டும் என்பதற்காக அவசரமாக இரவு வண்டிக்குச் சென்னைக்குப் புறப்பட்டான். வெறியன் கோலத்தில் வேகமாகப் போகும்கண்ணன் அறியவில்லை, கந்தசாமியும் அவனது ஆட்களும் தன்னைத் தொடர்ந்து வருவதை. கண்ணன் பட்டணத்துக்கு டிக்கட் வாங்குவதைப் பார்த்த கந்தசாமி, தன் சகாக்களுடன் தானும் டிக்கட் வாங்கிக்கொண்டு கண்ணன் ஏறிய பெட்டியிலேயே ஏறினன். அந்தப் பெட்டியில் இவர்களைத் தவிர வேறு சில கிராமத்து மக்களும் இருந்தனர். அவர்கள் அடுத்த ஊரில் வண்டி நின்றதும் இறங்கிப் போய்விட்டனர். மீண்டும் இரயில் புறப்பட்டது. கவலையே உருவான கண்ணன் ஆழ்ந்த சிந்தனையில் உட்கார்ந்திருந்தான். பரிதாபத்துக்குரிய அவனிடம் கேடி கந்தசாமி பேச்சுக்கொடுத்தான். ஊர், பெயர் விசாரித்துக்கொண்டிருக்கையில் கந்தசாமியின் ஆள் ஒருவன் தன் மடியில் மறைத்துவைத்திருந்த அக்கினித் திராவகப் புட்டியை எடுத்துக் குவளையில்ஊற்றிச் சமயம்பார்த்துகண்ணன்முகத்தில் ஊற்றினன். "ஐயோ... அம்மா'' என்று பெருங்கூச்சலிட்டவாறே துள்ளி வீழ்ந்தான் கண்ணன். கந்தசாமி பலவந்தமாக கண்ணனைத் தூக்கி ஓடும் இரயிலிலிருந்து கீழே வீசினன்!

பலத்த காயங்களோடு கீழே சுய நினைவின்றி வீழ்ந்து கிடந்த கண்ணனை வழிப்போக்கர்கள் பார்த்து, அடுத்த கிராமத்தில் போய்ச் சொல்ல,கிராமஉத்தியோகத்தர்கள் ஆள் அடையாளம் தெரியாத நிலையில் மட்டுமல்ல, உயிர் இருக்கிறதா இல்லையா என்று சந்தேகப்படும் நிலையில் கிடந்த அவனைத் தூக்கிச் சென்று சர்க்கார் மருத்துவமனையில் சேர்த்தார்கள். பரிசோதித்த டாக்டர் உயிருக்கு ஆபத்தில்லை என்றும், ஆனால் ஒரு கண் போய்விட்டதாயும், ஒரு கால் உடைந்துவிட்டதாயும் கூறி, உடைந்த காலை உடனடியாக எடுத்துவிடவேண்டுமென்று,எடுத்

தும் விட்டார்! உருக்குலைந்து ஒரு காலையும் ஒரு கண்ணையுமிழந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தான் அந்தக் காதல் பித்தன்!

வரகூர் மிராசுதாரரின் வருகைக்காகக் காத்திருந்தார் சீமான் சிங்காரவேலர். பட்டுலிங்கம் பிள்ளையும் வந்தார். வரவேற்கப்பட்டார். உபசரணைகள் முடிந்ததும், உறவுமுறைகள் பற்றிப் பேசி முடிந்தது. பிறகு சாஸ்திரியார் முன்னிலையில் சம்மந்திகளாக ஆக இருவரும் சம்மதம் தெரிவித்துத் தாம்பூலம் மாற்றிக் கொண்டனர். மாப்பிள்ளையைப் பார்க்கவேண்டுமென்றுகூடச் சிங்காரவேலர் சொல்லவில்லை. அந்த இடைவேளைகூடக் கொடுக்க அவர் விரும்பவில்லை. பூங்கோதையின் கழுத்தில் தாலி ஏறிவிட்டால் போதுமென்று கருதினார். திருமண நாள் நிச்சயமாகிவிட்டது. இருவரும் திருமண நாளைத் தள்ளி வைக்க விரும்பவில்லை. இருவருக்குமே பயம்! எங்கே மாப்பிள்ளையைப் பற்றிப் பெண்வீட்டார் கேள்விப்பட்டு விடுவார்களோ என்ற பயம் பட்டுலிங்கம் பிள்ளைக்கு. பெண்ணின் பழைய வரலாற்றை மாப்பிள்ளை வீட்டார் கேள்விப்பட்டுவிட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் பெண் வீட்டாருக்கு. இருவர் நிலையையும் அறிந்த சாஸ்திரியாரும் அதற்கேற்றுப் போல் நடந்துகொண்டார்.

சென்னையில் மங்களம் உடல் நிலை மோசமாகியது. கண்ணம்மா தூங்காமல் கவனித்தாள். இருப்பினும் மரணத்தைத் தடுக்கும் சக்தி மருந்துக்கு ஏது? தன் அண்ணன் வருவான் என்று காத்திருந்தாள். ஏமாந்தாள். அதோடு அவள் தாயும் அவளை ஏமாற்றி விட்டாள்! கண்ணம்மா தன்னந்தனியாகக் கதறினாள். உடன் பயிலும் மாணவிகள் அவளைத் தேற்ற முயன்றனர். 'அனாதைப் பிணம்போல் தாய்! அண்ணன் என்ன ஆனான்! தன் எதிர்காலம் எப்படியிருக்கும்! பிணத்தை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லுவது எப்படி?" இந்த எண்ணங்கள் அவளை மேலும் மேலும் கதறச் செய்தது. இறுதியாக அவளை— வளர்த்த தாயின் பிணத்தை அனாதைப் பிணமாகத் தூக்கிச்செல்வதைப் பார்த்த அவள் பெருங்கூச்சலிட்டு மயக்கமுற்றாள்!!

(தொடரும்)

# கை விளக்கு

[என். ஆர். தாசன்]

கைகாட்டியை அவன் கண்கள் ஏறிட்டுப் பார்த்தன. கை இன்னும் இறங்கவில்லை. பின் பிளாட்பாரத்தில் மக்கள் நடமாட்டத்தில் அவன் கண்கள் ஓடி ஒன்றின.

அவனுக்குப் பதினைந்து வயதிருக்கும். பரிதாபத்தை மனிதவடிவாக்கினால்?......அப்படிப்பட்ட உருவம்!

முதுகு ஆயிரம் கோணலாக வளைந்து கிடந்தது. கால்கள் சூம்பிக்கிடந்தன. அவற்றிலும் வளைவும் நெளிவும்! அவன் பருவ வளர்ச்சியின் வெம்பல் உருவம், கையிலிருந்த ஊன்றுகோலின் ஆதரவிலேயே அவன் நின்று கொண்டிருந்தான்.

அந்த ஊன்றுகோல் இப்பொழுது அவன் நினைவில் மிதந்தது. கண்களின் இமைக்கரையில் நன்றி உணர்வின் அலைகள் கை குவித்தன.

மீண்டும் கை காட்டியை நோக்கின அவன் கண்கள்! கை இறங்கி விட்டது.

அந்திஒடுங்கிக்கொண்டிருந்தது நெடுஞ்சாலையின் முடிவிடத்தில் தென்படும் தூரத்தோற்றக் கவர்ச்சியை அங்கே கண்டான்.

'இத்தனை நேரம் நான் ஊர் சேர்ந்திருப்பேன்' அவன் முணுமுணுத்துக்கொண்டான்.

அவன் 'டிக்கெட்' எடுக்க முடியுமா? பரிசோதகர் பார்த்துவிட்டார். ஒருவழியில் நல்லவர்தான்! அவனை அடிக்கவில்லை. பாதிவழியிலே இறக்கி விட்டுவிட்டுப் போய் விட்டார்.

வண்டிவந்து நின்றது.

முண்டி அடித்துக்கொண்டு ஏறும் அந்த மனிதர்களிடம் அவன் எம்மாத்திரம்! அதிலும் அந்த 'வெள்ளை உடைக்காரர்'களின் கண்களில் படாமல் ஏற வேண்டுமே! இங்குமங்கும் குதித்துக் கு[illegible] நடந்தான்.

ஒரு இடம் தெரிந்துவிட்டது. ஓடிவந்தான். ஆமாம்; தள்ளாட்டத்திலும் ஒரு ஓட்டம்!

வண்டியின் உள்ளே அந்த ஊன்றுகம்பை வைத்தான். கைப்பிடியை அவன் கைகள் இறுக்கிக் கொண்டன.

வண்டியைத் தொத்திக்கொண்டு உள்ளே கால்களை வைக்க முயன்றான். அந்தச் சூம்பியகால்களுக்கும் கோணல் உடலுக்கும் திடீரென அவ்வளவு சக்தியைப் பெற அதிசிய அவதாரங்களா என்ன! அந்த முனகல், வேதனை!......வர்க்க மாற்றத்தின் நெருக்கடி நேரத்தில்பீறிடுகிற பிரசவ வேதனைக்குச் சமம்!

'டேய்! கீழே இறங்குடா......!' உள்ளே இருந்த டிக்கட் பரிசோதகரின் இந்தக் குரல் அவனை நடுங்க வைத்தது. என்ன செய்வான்?

'இருதலைக் கொள்ளி இடை எறும்பு! இந்தநிலைக்குத், தான் ஓர் இலக்கிய உருவமாகி விட்டதாக நினைத்தான்.

வண்டியும் மெதுவாக அசைந்து கொடுத்தது.

தட்டுத் தடுமாறி வண்டியைத் தொத்திக்கொண்டு அவன் கீழே இறங்கினான். கண்மூடிக் கண் திறப்பதற்குள்...வண்டி எவ்வளவு தூரத்தை ஜீரணித்துவிட்டது!

'ஐயோ...!' அவன் அலறினான்.

'என் கை விளக்கு!......ஊன்று கோல்...!' ஓடுவதாக நினைத்துக் கொண்டு அவன் கீழேபுரண்டான். அந்த ஊன்றுகோல், அவன் வாழ்வின் ஒரே பிடிப்புப் பொருள், வண்டியிலேயே தங்கிவிட்டது.

வண்டியின் ஜன்னல் வழியாக ஒரு தலை எட்டிப்பார்ப்பது தெரிந்தது. அந்த இரண்டு கண்கள் அவனைக் குறித்துக்கொண்டன. பலகையில் தெரியும் ஊரின் பெயரையும் அவை கவனிக்கத் தவறவில்லை.

அவன் தலையைத் தூக்கிப் பார்த்தான். சிறிய தொரு புள்ளி

யாகக் கரைந்து கொண்டிருந்தது வண்டித்தொடர்.

சுற்றிலும் பார்த்தான். கண்களுக்கு எதுவுமே தெரியவில்லை. ஒரே சூனியம்!

இதயத்தில் கனம் காணமுடியாத ஏக்கம்! தன்னையே இழந்துவிட்ட வேதனை! சாவின் மயக்கமும், அழிவைக் குறிவைத்த விரக்தியும் அவன் நெஞ்சை மிதித்துத் துவைத்தன.

கோடி பாம்புகள் கக்கிவிட்ட நச்சு வெள்ளத்தில், தான் அடித்துச் செல்வதைப் போன்ற ஒரு பிரமை!

சிறிய இழப்புத்தான்! ஆனால் வாழ்வின் தராசுத் தட்டில் வைக்கப்பட்டபோது அந்த இழப்பின் கனம் தன்னையே தூக்கி எறியும் பரிதாபத்தைக் கண்டான்.

நீர்த்திரை கட்டிய அவன் கண்கள் வண்டித்தொடர் சென்ற திக்கையே நோக்கிக்கொண்டிருந்தன. நம்பிக்கையின் உயிர் அடைத்திருந்த வாழ்வின் ஒரே உயிர்ப்பொருள் பறித்துச் செல்லப்பட்ட திசை அல்லவா அது?

தண்டவாளங்கள் மங்கலாகத் தெரிந்தன. வண்டியைச் சுமந்து செல்லத் தண்டவாளங்கள்! ஆனால் அவனைச் சுமந்துசெல்ல?...'என்ன இருக்கிறது?'...

நினைவுகளின் பின்னோட்டம், கடந்த காலத்தின் வளைவுகளிலும், திருப்பங்களிலும் விழுந்து நகர்ந்தன.

இப்படிப்பட்ட வேதனையை இதற்கு முன் அவன் கண்டதே இல்லை.

தகப்பனை இழந்தான். அன்று கூட ஏதோ வருத்தப்பட்டான். தாயை இழந்தான். சில துளிக் கண்ணீரைத்தான் அவளுக்காக வடிக்க முடிந்தது. உற்றார், உறவினர், உடன்பிறந்தோர் இவர்கள் எல்லாம் அவனோடு தம் உறவை முறித்துக்கொண்டார்கள். அப்பொழுதெல்லாம் அவன் அனுபவித்தது வழக்கத்தை ஒட்டிய பிரிவின் சாதாரண வேதனையைத்தான்! ஆனால் இன்று?...உலகமே அவனைப் பொறுத்த மட்டில் முடிந்துவிட்டது.

அவனுடைய பெற்றோர், உற்றார் உறவினர், நண்பர் எல்லோருமே அந்த ஊன்றுகோல்தான்! அவன் துயரத்திலும், துன்பத்திலும் அது பிரியவில்லை. அவனுடைய கோர உருவத்தை அணைத்துக்கொண்டது. இதயம் பெற்றுவிட்டதாகக் கூறும் மனிதர்களைப்போல் அது முகம் சுளிக்கவில்லை. அது, அவனைவிட்டது. அவன், அதுவாகி விட்டான்.

அந்த ஊன்றுகோல் அவனுக்குக் கைவிளக்கு! நம்பிக்கையின் ஒளிக்கோடு! ஒட்டுறவின் மூலக் குருத்து!

இனி...?

மறுநாள்! அந்த வண்டிவந்து சேர்ந்ததும் ஓடினான். ஆமாம்; நாலுகாலால்! ஊன்றுகோலை வைத்த இடம் தெரிந்தது. தேடினான்; அவன் கண்கள் ஏமாற்றத்தை உமிழ்ந்தன. அன்று தலை நீட்டிப் பார்த்த அந்த ஆளின் முகம் தெரிகிறதா என்று பார்த்தான். காணவில்லை.

அடுத்த நாள்! மீண்டும் அங்கே வந்தான்; தேடினான். வழக்கமான ஏமாற்றம்! வழக்கமான புகைச்சல்!

தினம் தினம் வந்தான். அந்த ஊன்றுகோல் கிடைக்கவில்லை. அந்த மனிதனையும் காணவில்லை.

ஏமாற்றம்! ஏமாற்றம்! ஏமாற்றத்தில் இதயம் இதயமாக இல்லை. சதைத்துண்டுகளின் குவியலாகத் தென்பட்டது. அந்த இதயத் துண்டுகளை ஒவ்வொன்றாய்த் தினம் அந்த பிளாட்பாரத்தில் எறிந்துவிட்டுப் போவதுபோல் தோன்றியது அவனுக்கு.

எலும்பும் தோலுமாய்விட்டான். நெஞ்சில் மயானத்தீ! உயிரின் ஈரத் தன்மை தீய்ந்துவிட்ட வரட்சி! அவன் படுத்த படுக்கையாகிவிட்டான். இல்லை; படுக்கை ஏது? படுத்த தரையாகிவிட்டான்.

கனவு கண்டான், ஊன்றுகோல் கிடைத்துவிட்டது போலவும், கம்பீரமாக நடப்பது போலவும்! கண்ணைத் திறந்து பார்க்கும்போது அவன் முன் ஒரு மயானம் விரியும்.

புகை வண்டி நிலையத்தை ஒட்டி வளர்ந்திருந்த ஆலமரத்தடியில் அவன் படுத்துக்கொண்டு அந்த வண்டித் தொடர் சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

* * *

புகைவண்டி நிலையத்தின் பெயர்ப்பலகையை அவர் இரண்டு மூன்று தடவை பார்த்துக் கொண்டார். பிளாட்பாரத்தை அவர் கண்கள் ஊடுருவின. அவர் கையில் அந்த ஊன்றுகோல் இருந்தது. ஆமாம்; அ[illegible]ஜன்னல் வழியாகத் தலைநீட்டிப் பார்த்த அந்தப் பெரியவர்தான்!

'அன்றே வந்திருக்க வேண்டும்! வேலைத் தொல்லை நகரவிடவில்லை. பரவாயில்லை... இங்குதான் இருப்பான்.' சிந்தனையின் உதைப்பு. அவர் நடைக்கு வேகம் கொடுத்தது.

எதிரில் ஆலமரத்தடியில் ஒரு சிறு கூட்டம்! அதை நோக்கி நடந்தார்.

அங்கே?... ஒரு சிறுவனின் உடல் படுத்த படுக்கையாகக் கிடந்தது. அருகில் வந்து பார்த்தார். கண்களில் ஏமாற்றம் கொப்பளித்தது. நெஞ்சின் கோடிக்கரையில் ஒரு வித சலசலப்பு! நிம்மதி குலைக்கும் அலை ஏற்றம்!

அந்த ஊன்றுகோலை அருகில் வைத்தார். குனிந்து பார்த்தார். அவன் முகத்தில் ஏமாற்றம் அறைந்து கிடந்தது. உயிர்ப்பொருளின் கடைசித் துடிப்பில் கவியும் கோர இருள் அங்கே அச்சேற்றுச் சிரித்தது.

உயிர் வாழ்வைக் கதையாக்கும் இயற்கையின் 'புனித' நிலை அவனைத் தொட்டுவிட்டது. ஆமாம்; அந்த நொண்டிச்சிறுவன் அங்கே சவமாகிக் கிடந்தான்.

எண்ணங்களின் சோக ஊர்வலம் அவர் இதயத்தைப் பிழிந்தது.

"மனிதனுக்கு அழத்தெரியும். அவனுக்காக அழ யார் இருக்கிறார்கள்?......ஊன்றுகோல் அவன் அருகில் கிடக்கிறது. ஆனால் போலி அழுகையைக் காட்டக்கூட அதற்கு மனிதவாய் இல்லையே..."

கூட்டம் மெதுவாகக் கலைந்து கொண்டிருந்தது. சோகத்தால் மூடிக்கொண்ட இமைகளின் இடுக்கின் வழியே அது உலக வாழ்வின் மயான ஊர்வலம்போல் தெரிந்துகொண்டிருந்தது அவருக்கு.

இந்த நிகழ்ச்சி, ஒரு உண்மையான தொண்டனுக்கு — அவன் சார்ந்திருக்கும் இயக்கக் கொள்கைகளின்மேல் எவ்வளவு பொறுப்பிருக்கவேண்டும்—அந்த இயக்கத்தின் கொள்கைகளை--ஒரு முடவன் தன் ஊன்றுகோலை இழக்காமல் பாதுகாக்க வேண்டுமென்று எப்படி எண்ணுவானோ, அதே போன்ற நிலை — பிறக்கவேண்டும் என்பதற்கு ஒருஎடுத்துக்காட்டாக அமையட்டும்.

# என் கிடைத்ததோ வேலை?

என்ன! தலைப்பைப்பார்த்ததுமே ஆச்சரியப்பட்டுப் போய்விட்டீர்களா? ஆமாம் நிச்சயம் என்னைப் பைத்தியக்காரி என்றுதான் எண்ணியிருப்பீர்கள். ஆம், நிச்சயம் நான் ஒருவகையில் பைத்தியக்காரிதான்!

யார் யாரோ, 'வேலை, வேலை' என்று தேடி அலைகின்றார்களே, அவர்களுக்கெல்லாம் கிடைக்கக்கூடாதா அந்த வேலை? என் பிள்ளைக்குத்தானா அந்தச் 'சனியன்' கிடைத்திருக்கவேண்டும்?

ஆச்சரியமாக இருக்கிறதா?... நான் இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். அதுவும் வேலையற்றோர்தொகை பெருகிவிட்ட இந்த இந்தியத்துணைக்கண்டத்தின் ஒரு மூலையில் இருந்துகொண்டுதான் பேசுகிறேன். என் மகனுக்கு வேலை கிடைத்ததைப் பற்றித்தான் கவலைப்படுகின்றேன். நான் அவனுடைய மாற்றாந்தாய் என்றுஎண்ணிவிடாதீர்கள். பத்து மாதம்சுமந்து பெற்றதாய்! ஆமாம், தாய்தான் தன் மகனுக்குக் கிடைத்த வேலை வேறு யாருக்காவது கிடைத்திருக்கக்கூடாதா என்று மனதார வேண்டுகிறேன். ஆமாம்! என் நிலையில் வேறு யார் இருந்திருந்தாலும் அப்படித்தான் சொல்லியிருப்பார்கள். இன்னும் சிறிது பழைய நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், வேலை கொடுத்தவனைச் சபித்திருப்பார்கள்; பிள்ளை, யார் முகத்தில் காலையில் எழுந்ததும் விழித்தானோ— அவர்கள் ஒழிந்துபோகக்கூடாதா என்று மனதாரக் கோபித்திருப்பார்கள்; இந்தப் பாழும் பிள்ளை எந்த நேரத்தில் வீட்டைவிட்டுக் கிளம்பியதோ என்று நேரத்தை நொந்திருப்பார்கள். ஆனால் நான் அவ்வாறு சொல்லவில்லை. சிறிது முன்னேறியவள்—நாகரிகம் வெளியில் மட்டுமல்ல உள்ளத்திலும்தான் வேண்டும் என்று எண்ணுபவள். அதனால்தான் வேலையைத் திட்டுகிறேன். என் மனப்புயலை அடக்க வேறு வழி கிடைக்காததால்!

வேறு என்ன? வெண்ணெய் கிடைக்கும் என்று பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, கடன்பட்டுக் கையில் கிடைத்ததைச் செலவிட்டால், இறுதி நேரத்தில் — வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்துவிட்டால்? - கஷ்டப்பட்டு மத்து வாங்கியிருக்கவேண்டாம்— பக்கத்து வீட்டு வள்ளியிடம் வலியச் சென்று பத்து ரூபாய் பாலுக்காகக் கடன்பட்டிருக்கவேண்டாம்- எதிர்வீட்டு எல்லம்மாளிடம் தயங்கித் தயங்கிப் பானையைப் பெற்றிருக்க வேண்டாம்... பாலைக்காய்ச்சிப் பதப்படுத்தித் தயிராக்கிப் பாதுகாத்திருக்கவேண்டாம்— எதையுமேசெய்திருக்கவேண்டாம்.

ப. பழனிவேலு

ஒவ்வொரு மனிதனும் தனக்கு ஆதாயம் ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்துத்தானே ஒரு செயலில் ஈடுபடுகின்றான்? ஆதாயம் கிடைக்காதென்று தெரிந்துவிட்டால், அவன் வேலையே செய்திருக்கவேண்டியதில்லையே!

அதே கதைதானே என்னுடைய வாழ்விலும் நடந்துவிட்டது? அரும்பாடுபட்டுப் படிக்கவைத்தோம் பிள்ளையை — பத்தாவது வகுப்புவரையில்தான் - பத்தாவது வகுப்புப் [illegible]புத்தானே பராரிகளுக்கு [illegible]ட்டம் பெறுவது போல! ஆகவே, மேலே வேலைதேட வேண்டிய அவசியம் எழுந்துவிட்டது. ஆனாலும், என்னைப்போல ஒருத்தி இனிமேலும் இந்த மண்ணில் பிறக்கவேகூடாது.

மலடி என்ற பெயர் பெறாமல் பெற்றேன் மூன்று பிள்ளைகளை. இரண்டு பிள்ளைகளில் ஒன்று பிள்ளையே இல்லை. அவன் சாப்பாடுகூடச் சரியாகச் சாப்பிடுவதே இல்லை. மருத்துவரே சொல்லிவிட்டார், "அவனை மிகவும் காவலோடு காப்பாற்றிவரவேண்டும். இல்லாவிடில் எந்தநேரத்தில் எந்த இடத்தில் அவன் இறப்பான் என்று சொல்லமுடியாது" என்று! பெற்றமனம் எப்படி இருக்கும்? ஆனாலும் எப்படியோ மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு, அவனை இருபத்தைந்து வயது வரையில் தேற்றிவிட்டோம்! அவனும் இனிமேல் தன் பெற்றோரை நம்புவது தனக்குக்கவுரவம் இல்லை என்று உணர்ந்து, எங்கெங்கோ வேலைக்குச்சென்றான். ஆறுமாதம் ஓரிடம் வேலை என்றால், பிறகு இரண்டு மாதம் வேலையில்லை. மறுபடியும் இரண்டு மாதம் வேலை— இப்படிஅவன் இடம் விட்டு இடம் போய்க்கொண்டே இருந்தான். எங்களுக்கும் இருந்த வறுமையில் அது அவ்வளவு தவறுதலாகப் படவில்லை.

ஒருவன்தான் அப்படி என்றால், இன்னொரு பையன் நன்றாகத்தான் பிறந்தான். இடையில் அவனுக்கு ஓர் ஆகாவழி நோய் வந்தது. அதிலிருந்து அவன் தேறி எழுந்தால் போதும் என்று ஆகிவிட்டது. அதனால், நம்மை மோசம் செய்துவிடுவான் என்றிருந்த பிள்ளை எழுந்துவிடவே, அளவுக்கு மீறிச் செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டோம். அதன் விளைவு இப்போது அவன் எங்கே —நாங்கள் எங்கேயோ!

எந்தத்தாய்தான் இப்படி வயது வந்த இரண்டு ஆண் பிள்ளைகளை விட்டுவிட்டுப்பேசாமல்இருப்பாள்? ஆனால் நான் பேசாமல் இருந்தேன் என்றால் என்னகாரணம்? வறுமை அவ்வளவு வாட்டியது எங்களை. என் மாமனார் என்னவோ எங்களை வஞ்சிக்கவில்லை. ஒரு வீடும் ஐந்து காணி நன்செய் நிலமும்தான் வைத்துவிட்டுப்போனார். பொன் விளையும் பூமி என்றால் அதற்குத்தான் பொருந்தும். அப்படிப்பட்ட நிலமிருந்தும் எங்களுக்கு வறுமை ஏற்பட்டுவிட்டது!

என் வீட்டுக்காரருக்கு முதலிலேயே சிறிது தற்பெருமை அதிகம். அதிலும் இந்த பாழாய்ப்போன ஊராட்சி மன்றத் தேர்தல்கள் வந்துவிடவே, பணத்தைக் கொட்டி விளையாடினார். அதற்கேற்றாப்போல் அந்தக் கந்தசாமி வந்து போதனை செய்ய ஆரம்பித்தான். போட்ட பணத்தைப் பின்னால் பல மடங்காக வாரிவிடலாம் என்றும், இதனால் பயமின்றித் தேர்தலில் ஈடுபடலாம் என்றும் தூண்டினான் என் கணவரை!

தேர்தல் முடிந்தது. இவர் தலைவராகவும் வந்துவிட்டார். அதற்கு வேறு பணச்செலவு. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதை போல் ஐந்து காணி ஒரு காணியாகக் குறைந்தது!

போதாக் குறைக்கு ஊர்க்காரர்கள் சேர்ந்து வைத்திருந்த கூட்டுறவுச் சங்கத்தின் பணத்தை ஒரு நாள் எவனோ களவாடிவிட்டான். தேர்தலில் என் வீட்டுக்காருக்கெதிராக நின்று தோற்றுப்போனவன், ஒரு பெரும் புரளியை உண்டு பண்ணிவிட்டான். அதாவது ஐயாயிரம் ரூபாயை அவரே எடுத்துக் கொண்டு ஏமாற்று வித்தைசெய்கிறார் என்று வீடு வீடாகப் பிரசாரம் செய்தான். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அல்லவா? ஊரும் அவருக்கெதிராகத் திரண்டது!

தன்மான உணர்ச்சி மிக்க அவர் அவர்கள் முகத்தில் அடிப்பதைப் போல் ஒரே ஒரு முன்னோர் உடமையான அந்த வீட்டையும் சங்கத்தின் ரூபாய்க்கு ஈடாக மாற்றிக் கொடுத்துவிட்டார். பின், நாங்கள் தங்க நிழலேது? இருந்த ஒரு காணியில் பாதியை விற்று ஒரு சிறு குடிசை கட்டினோம். இவ் [illegible] பெண்

கள் ஓர் ஆண் பிள்ளை!... மனிதன் துன்பப்பட வேறு என்ன வேண்டும்?

இதனால் இரண்டு பிள்ளைகளையும் கவனிக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாது போயிற்று. அவர்கள் இருவரும் சேர்ந்து மாதம் நாற்பது ரூபாய் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அதில்தான் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி அந்த ஒரு மகனைப் படிக்க வைத்தோம். 'இந்தப் பிள்ளையாலாவது குடும்பத்துக்கு ஏதாவது நன்மை கிடைக்காதா? கிடைக்காவிட்டாலும், அவனாவது நலமாக இருக்க மாட்டானா? நம்மைப்போல் அவனும் ஏன் கஷ்டப்படவேண்டும்?' என்று எண்ணித்தான் படிக்க வைத்தோம்.

எங்கள் சக்திக்கு மேலும் படிக்க வைக்க நாங்கள் நினைக்கவில்லை. அவனைச் சென்னைக்கு, என் தம்பியின் வீட்டிற்கு அனுப்பி; வேலை தேட முயற்சி செய்தேன். என் தாயாருடன் பிறந்த இரண்டு ஆண்களில் ஒருவன்—என் அண்ணன்-இறந்துவிட்டார். அடுத்துச் சிறு வயதிலேயே பொட்டிழந்த என் அக்காள், வீடுகளில் சமையல் செய்து பிழைத்து வருகிறாள் நானே வெளியில் சொல்லாக்குறை! ஆனால், அவனாவது நல்வாழ்வு வாழ்கிறானே என்று மனம் மகிழ்ச்சி அடைந்தது.

அவன் குடும்பத்துக்கு வருவாய் போதாதெனினும், வருவதைச் சாமர்த்தியமாக அவன் மனைவி சமாளித்து வருகிறாள். இந்த அழகில் நாம் வேறு ஏன் நம்பிள்ளையை அனுப்பி அவனுக்குத் தொல்லை தரவேண்டும் என்று மனச்சாட்சி கூறியது. இருந்தாலும் வேலை கிடைக்கும் வரை இருக்கட்டும்—இந்த உதவி கூடவா கூடப் பிறந்தவன் செய்யக்கூடாது? என்று அனுப்பினேன்.

துன்பங்கள் தீருவதற்கான அறிகுறியோ என்னவோ, அவன் ஊருக்குப்போய் ஆறு மாதங்களுக்கெல்லாம் ஓர் இன்ப அறிவிப்பைச் சுமந்துகொண்டு ஒரு கடிதம் வந்தது. அதைக் கண்டு நாங்கள் அப்படியே மகிழ்ச்சிப் பொய்கையில் ஆழ்ந்தோம். என்னுடைய பையனுக்கு வேலை கிடைத்துவிட்டதாம்! அவனே கைப்பட எழுதியிருந்தான்: "பயப்[illegible]வேண்டாம் அம்மா! நமக்கு [illegible]த வாரி

அளிக்கக் காலம் காத்துக்கொண்டிருக்கிறது. என்றும் துன்பம் அனுபவித்தவர் ஒருவருமே கிடையாது; அதிலும் ஊக்கமாக வாழ்ந்தவர்கள் உலகில் தோற்றதே கிடையாது. என்மேல் எனக்கு அபாரமான நம்பிக்கை இருக்கிறது. எனக்கு என் அருமையான இரண்டு கைகள் இருக்கின்றன. உடலார உழைப்பேன். உனக்குப் பணம் சேர்த்து அனுப்புவேன். அப்பாவும், நீயும், தங்கைகளும் புத்தாடை உடுத்திப் புது மகிழ்வு பொலிய அடுத்த ஆறு மாதங்களில் தமிழர் திருநாள் காத்திருக்கிறது. இங்கே மாமா மாமி எல்லோரும் நலம். அவர் என்னுடைய வருவாயில் ஒரு காசுகூட எடுக்க மறுத்துவிட்டார். முதல் மாத வருவாயில் பாதியைக் கொண்டு எனக்கு நல்ல நல்ல உடைகள் தைத்துக் கொடுத்தார். உடல் மெலிந்திருக்கிறது என்று மருத்துவரிடம் சென்று அவர் யோசனைப்படி ஒரு டானிக் வாங்கித் தந்தார். அன்பான மாமியின் உபசரிப்பால் ஒரு சுற்றுப் பருத்து விட்டேனம்— முறைப்பெண் அமுதா கேலி செய்கிறாள். இன்னும் எவ்வளவோ உன்னிடம் நேரில் பேசவேண்டும் என்று ஆவலாக இருக்கிறேன். எல்லாம், இன்னும் சில நாட்களில் நேரில் சந்திக்கும்போது— இத்துடன் ரூ. 100/- அனுப்பியுள்ளேன். பெற்றுக் கொள்ளவும்."

என்னுடைய கண்ணு நேரில் இருந்திருந்தால் அப்படியே அவனை அணைத்துப் பெற்ற மனத்தின் ஆசை தீர உச்சிமுகர்ந்து, முத்தம் இட்டிருப்பேன். அவன் எப்படித் தெளிவாக நம்முடைய வறுமையை உணர்ந்து எழுதியிருக்கிறான்! உழைத்து வெற்றி காணாதவர்கள் இல்லை, அதனால் உறுதியாக உழைக்கப்போகிறேன்' என்கிறானே? இதற்குள் எவ்வளவு பொறுப்பு வந்துவிட்டது அவனுக்கு!?...... படிக்கும்போதுகூட எவ்வளவு கஷ்டப்பட்டுப் படித்து அதிகமதிப்பெண்கள் (மார்க்) வாங்கினான்? பரிசுகள் கூடப் பெற்று வந்துகாட்டி மகிழ்ந்திருக்கிறானே?

நான் — இல்லை என்மனம் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தது. அவன்உழைப்பில் சிறிதுகூடச் சந்தேகமில்லை. அவன்கட்டாயம் முன்னேறிவிடுவான். என் கணவரும் பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லிக்

கொடுத்து மாதம் இருபதுரூபாய் சம்பாதிக்கிறார். பிள்ளை இனிமேல் மாதம் ஐம்பதாவது அனுப்புவான். அவன் வேலைக்குச் சென்று, இன்னும் இரண்டொரு ஆண்டுகள் கழித்து, ஆசை மகனுக்கு அழகான பெண்ணைப் பார்த்துக் கலியாணம் பண்ணிவைத்து அவன் வாழும் இன்பமான வாழ்வைக் கண்ணால்கண்டு இன்புறவேண்டும் அவன் மனைவியிடம் கொஞ்சிப் பேசும் நேரம் பார்த்து மறைந்து நின்று மகிழவேண்டும்.

மாதங்கள் உருண்டோட எனக்கொரு அழகான ஆண் குழந்தையைப் பெற்றுக் கொடுப்பான். அந்தப் போக்கிரிப்பயலிடம் அடிபட்டு, உதைபட்டு, இன்ப வாழ்க்கை வாழ்ந்து சாகவேண்டும், என்றல்லவா எண்ணியிருந்தேன்—

அம்மவோ, நினைத்தாலும் உடம்பு நடுங்குகிறதே...... அவன் கடிதம் போட்டு ஒருகிழமைகூட ஆகவில்லையே... மதியம் இரண்டுக்கு ஒரு தந்தி வந்து இப்படி என்னை அலைக்கழிக்கும் என்று நான் நினைக்கவில்லையே?-என் பிள்ளைக்கு அலுவலகத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் ஒருகை உடைந்து விட்டதாம்-எங்களை உடனே வரும்படி கோரியிருந்தது தந்தியில்—ஐயகோ, என்னுடைய நூற்றைம்பது அடுக்குமாளிகை சுக்குநூறாக ஆகிவிட்டதே—நேராகப் படுக்கையண்டை ஓடினேன்—புலம்பினேன்—நரம்புகளெல்லாம் சிறு சிறு துண்டுகளாக அறுக்கப்பட்டு விட்டதால் அந்தக்கையை எடுத்துவிட வேண்டும் என்று கூறிவிட்டார்களே—அப்போதுதான் அது அவனது வலதுகை என்பதை உணர்ந்தேன்.

சித்திரை வெயிலில் கிடந்து சிதறும் புழுப்போல் துடித்தேன். மகனே 'நீ கிள்ளிய கன்னத்தை நான் முத்தமிடும் காட்சி' வந்து என்னைக் கொல்லுகிறதடா-என்று கதறி அழுதேன்—அழுது என்ன பயன்? போனது வரப்போகிறதா என்று என்னால் இருக்க முடியவில்லையே-இன்பம், சுகம், அமைதி இவைகளெல்லாம் கற்பனையோடு போய்விட்டன. இனி என்றும் நாம் வறுமையாளர்கள் தான். வறுமையில் வாடிக்கொண்டிருந்தாலும் பரவாயில்லை-என் அன்பான மகனை அடிக்கொருதடவை முழு வடிவத்தையாவது பார்த்துக்கொண்டிருப்பேனே — இப்போது என் மகன் ஒரு முடவன். ஆம் வலதுகையற்ற முடவன். அவன் இனிக் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட முடியாது. அதைச் சுவைத்து இன்பம் காணலாம் என்று நான் கனவுகாண எனக்கு உரிமை இல்லை.

நான் மயங்கி விழுந்தேன்... நினைவு தெரிந்து எழுந்தபோது மற்றொரு கட்டிலில் அதே மருத்துவ மனையில் படுத்திருந்தது தெரிந்தது. உடனே கீழே இறங்கினேன். 'என் மகன் எங்கே?' 'என் மகன் எங்கே?' என்று கத்திக் கொண்டே ஓடிய என்னை ஒரு வெள்ளாடைக்காரி பிடித்து நிறுத்தினாள். இதற்குள் நாலு பேர் என்னைச் சூழ்ந்துகொண்டு கட்டிலுக்கு இழுத்துச் சென்றார்கள். கட்டு கட்டு என்று என்னைக் கட்டிப்போட்டுவிட்டு ஊசி இரண்டையும் ஏற்றிவிட்டு நகர்ந்தார்கள்.

அந்த வெள்ளுடைக்காரி இன் இன்னொரு நர்சிடம் ஆங்கிலத்தில் ஏதோ பேசினாள்—என்னைப்பற்றித் தான்—ஒருவாறு அதைப்புரிந்து கொண்டேன்—நான் ஒரு பைத்தியகாரியாம்—ஆமாம் நான பைத்தியகாரிதான்.

❊

2-ம் பக்கத் தொடர்ச்சி

மட்டுமல்ல வெளிநாடுகளில் வதியும் விசயலட்சுமி பண்டிதை போன்ற போற்றற்குரியவர்கள் இன்றைய தினம் பாரதப் பண்பாட்டைக் காப்பாற்ற எந்தளவுக்குச் செல்கின்றனர் என்பதை இரண்டாண்டுகளுக்கு முன் இலங்கையில் கைகோர்த்துக் கொண்டு அவர் தம் புத்திரிகள் ஆடிய நடனம் சொல்லுமே?

மதுவிலக்குச் சரியாக அமுல் நடத்தப்படவேண்டும்—சலுகையின் காரணமாக 'பெர்மிட்' பெற்றுக் குடிப்பதற்கு முடிவு கட்டவேண்டும் என்று கூறிடும் திராவிட முன்னேற்றக் கழகம் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறது என்று கபோதி கூறலாம்; கருத்தற்றவன் சொல்லலாம்; இவரா இப்படிச் சொல்வது! செச்சே!!

கைதட்டவேண்டும் தன்னுடைய கட்சிக்காரர்கள் என்பதற்காக இப்படி இராசாராம் பேசியிருக்கக் கூடும். ஆனால், இப்படிப் பேசுவதன் மூலம் 18-இலட்சம் பேர் வாழும் சென்னை மாநகரத்தையே மரியாதைக் குறைவாகப் பேசுகிறோம், இது அவர்கள் காதுகளில் விழுந்தால் அடுத்த தடவை காங்கிரசுப் பெட்டியில், எமது மானத்தையிகழ்ந்த பெட்டியே, இதோ மண் என்று அள்ளிப் போடவும் தயங்கமாட்டார்களே என்பதையும் மறந்து பேசியிருக்கிறார்.

சிற்றூரல்ல சென்னை! தமிழகத்தின் தலைநகரம்!! அங்கு வாழ்வோரில் பெரும்பாலோர் நாட்டு நடப்புப் புரியாதவர்களல்ல. கிராமங்களைப்போல அறியாமை இருள் அதிகம் பரவிய இடமல்ல. மத்திய தர வர்க்கத்தினரும் படித்தோரும், படித்தோரைக் கேட்டுச் செய்தி அறியும் ஆவல் கொண்ட பாட்டாளிகளும் வாழும் நகரமாகும். இப்படிப்பட்ட வாக்காளர்களையே எள்ளி நகையாடுகிறார் காங்கிரஸ் தலைவர்! இவர்களையெல்லாம் சாராயம் காய்ச்சுகிறவர்கள் என்றும் அவர்களுக்கு உதவி செய்து திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் வெற்றிகண்டது என்றும் செப்புகிறார்! குளிர்நிலவை கொள்ளிக் கட்டையோடு குருடனும் ஒப்பிடான்! தளிர்ச்செடியைச் சருகென்று தருக்கனும் கூறான்! ஆனால் காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்!!

*

நாம் கார்ப்பரேஷனில் அமர்ந்ததும் "கட்டுங்கள் இரகசியக் குடிசைகளை! சாராயம் காய்ச்சுவதே கார்ப்பரேஷன் கடமை! காய்ச்சுங்கள்!" என்று முதல் தீர்மானம் போட்டுச் சென்னை வீதியெல்லாம் சாராயக் கடைகளாகி, போவோர் வருவோரெல்லாம்மூக்கைப்பிடித்துக்கொண்டு "என்ன இந்த தி. மு. க? இப்படிச் சாராயம் காய்ச்சி விற்கச்செய்து விட்டதே!" என்று ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால், இராசாராம் சொன்னதும் "ஆகா! அதிமேதை அறிந்து சொல்கிறாரே! இந்தப் பெறற்கரிய பேரறிஞரின் சொல்கேட்டு தேர்தலில் நடக்காததன் பலனைத்தானே இப்போது அனுபவிக்கிறோம்" என்று மக்கள் கருதுவர்.

நடப்பதென்ன சென்னையில். மாநகராட்சி மன்றத்துக்குள் தி. மு. க. நுழைந்ததும்,

சலவைத் தொழிலாளரும், சிகையலங்காரத் தொழிலாளரும் கட்டி வரும் வரியைப் போக்கிடத் தீர்மானித்துள்ளது.

வசதியற்றவர்கள் செலுத்தி வந்த தொழில் வரியை எடுத்துவிட முடிவு செய்திருக்கிறது.

பதினாயிரம் பிள்ளைகளுக்கு, நண்பகல் இலவச உணவு அதிகமாகத் தர முடிவு செய்துள்ளது.

பெரிய பெரிய கம்பெனிகளும், மாடமாளிகைகளும் அவைகளுக்குத் தக்கபடி வரி செலுத்தியாகவேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

இப்படி, மக்களுக்கான நன்மைகளைச் செய்யும் மாநகராட்சியை நடத்தும் தி. மு க. சாராய வாடையால் இடம் பெற்றது என்கிறார் இராசாராம்! தூ! தூ!! என்று, இவருரைகேட்டு, சென்னை மக்கள் துப்புவர்! வரும் பொதுத் தேர்தலிலும் நல்ல படிப்பினையை நிச்சயம் காட்டுவர்!! ★

# இலங்கையில் இராசேந்திர பிரசாத்

அண்மையில், ஈழம் சென்று திரும்பிய டாக்டர் இராசேந்திரரின் நினைவாகத் தோழர் தேசபந்து என்பவர் 'சுதந்திரன்' இதழில் எழுதிய கட்டுரையை அப்படியே இங்கு தருகிறோம். இலங்கையில் வாழும் தமிழருக்கு அங்குள்ள அரசாங்கம் செய்யும் கொடுமைகளை விளக்கி, அதே சமயத்தில், இராசேந்திர பிரசாத் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் மூலம் தங்கள் கொடுமைகளை மூடிமறைக்கப் பண்டார நாயகா கையாண்ட தந்திரங்களையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்திய ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திரப்பிரசாத் தமது 6-நாள் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு கடந்த 22-ந் தேதி தாய்நாடு திரும்பிவிட்டார். நாமும் இந்தச் சந்தர்ப்பத்தில், நடந்தவற்றையெல்லாம் திரும்பிப் பார்ப்பது நலம் அல்லவா?

"ஜனாதிபதிக்கு இலங்கையில் அளிக்கப்பட்ட மகோன்னதமான வரவேற்புப்பிரமாதம். அரசாங்கமும் மக்களும் அவருக்குச் செய்த அன்பு உபசாரம் ஈடு இணையற்றது"--இப்படி இன்றும் பேசிக்கொள்ளப்படுகிறது! உலக நாடுகள் பலவற்றுக்கும் (ஆமாம் அந்தந்த நாட்டு அழைப்பின்பேரில்தான்) அவ்வப்போது விஜயம் செய்வதைத் தமது கடமைகளில் ஒன்றாகவோ, அல்லது பொழுதுபோக்காகவோ கொள்ளும் ஜனாதிபதி இலங்கை விஜயத்தையும் அப்படிச் சாதாரணமான ஒன்றாகவே மதித்திருப்பார்.

## ஆனை அப்படியே உலுக்கியிருக்கும்

ஆனால் இலங்கை அவரைத் திணறடித்துவிட்டது. 16-ந் தேதி காலை இரத்துமலானை மண்ணில் காலடி வைத்ததிலிருந்து, அவருக்குப் புதியதோர் அநுபவம் கிடைப்பதாயிற்று. சென்ற இடமெல்லாம் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் அவரைக் காணக், கூட்டம் கூட்டமாக நின்றகாட்சி ஜனாதிபதியை உலுக்கியிருக்கும்.

டாக்டர் பிரசாத் இலங்கையில் எங்கு சென்றாலும் அவருடைய மெய்க்காப்பாளர்கள் அவரோடு போனதுபோல, வேறு யார் போனாலும் போகாவிட்டாலும் நமது வானொலி நிலையத்து ஒலிவாங்கிகளும், ஒலிப்பதிவுக் கருவிகளும், அரசாங்கப் பிலிம் பகுதிக் காமிராக்களும் தவறாமல் கூடவே சென்றன. அதன் பலன் ஓரளவுக்கு இதுவரைகிடைத்துவிட்டது. இன்னும் கிடைப்பதற்குப் படங்கள் திரையிடத் தயாராகவேண்டும்.

## காட்டியது பல்லும் பழைய கட்டிடங்களும்

இலங்கையில் ஜனாதிபதி தங்கியிருந்த சமயம், அவரை எவ்வளவு குதூகலமாக வைத்திருக்க முடியுமோ அவ்வளவுக்கு அரசாங்கம் முயன்றது. 74-வயதான அவரைச் சிரழிந்த பழைய நகரங்களிலுள்ள பாழடைந்த கட்டிடங்களுக்கு அருகில் கூட்டிச்சென்று காட்டினார்கள்.

ஜனாதிபதியின் சொந்த மாகாணத்தில் பிறந்த புத்தரின் புனித பல்லைப் பிரத்தியேகமாக அவருக்குத் திறந்து காட்டினார்கள். 'புத்தர் வாழ்ந்த காலத்தில் நம்மவர்கள் இராட்சதர்களாய் இருந்ததாகச் சரித்திரமே இல்லையே! அத்தனை பெரிய பல் அங்குள்ள மனிதருக்கு இன்றும் இல்லை; அன்றும் இருந்திருக்கவில்லையே!' என்று டாக்டர் பிரசாத் ஒருவேளை மனதுக்குள் எண்ணியிருக்கலாம். வெளியில் வாய்திறந்து அப்படி ஒன்றும் பேசவில்லை.

பேராதனைப் பூந்தோட்டத்தில் மரம் நாட்டுவித்தார்கள் அவரைக் கொண்டு. பல்கலைக் கழகத்தில் அவருக்குக் கௌரவ பட்டம் வழங்கினார்கள். பல பௌத்த நிலையங்களுக்கும் கொழும்பு இராமக்கிருட்டின மிஷனுக்கும் அவரை அழைத்துச் சென்றார்கள்.

## கிடைத்ததும் கிடையாததும்

பௌத்த நிலையங்களிலும் பிற இடங்களிலும் டாக்டர் பிரசாத்தைப்பற்றிப் பேசிய பௌத்த அன்பர்கள், அவர் [illegible] இந்தியாவில் பௌத்தம் வளரவும் பௌத்த கலாச்சாரம் நிலைபெறவும் செய்து வரும் பணிகளுக்காக அவரைப் பாராட்டினார்கள். "பௌத்தத்தை—பௌத்த கலாசாரத்தை இலங்கைக்கு ஈய்ந்தவர்கள் தாங்கள். அதற்கு நாம் என்றென்றும் தங்களுக்குக் கடமைப்பட்டவர்கள்" என்றும் பேசினார்கள்.

"பௌத்தத்தின் உயிர்நாடியான சகிப்புத்தன்மை, 'வாழ்-வாழவிடு' கொள்கைகளைக் கோட்டைவிட்டு விட்டு, ஓட்டைப் பந்தாக, சாறு பிழிந்த சக்கையாக, சுளை நீக்கிய தோலாகப் பௌத்தத்தைத் தந்துவிட்டீர்களே" என்று யாரும் வருத்தந் தெரிவிக்கவில்லை. இந்தியாவிடம் தற்போது இல்லாததையும் தமக்கே இன்றைய நிலையில் வேண்டாததையும் பிரசாத்திடம் பிரஸ்தாபித்துப் பயனில்லை என்று அவர்கள் விட்டிருக்கலாம். தொலையட்டும் அது!

## யாழ்ப்பாணத்தில் ஏக தடபுடல்

யாழ்ப்பாணத்து மக்கள் ஜனாதிபதி பிரசாத்தைத் திக்குமுக்காடச் செய்துவிட்டார்கள். தம் நாடு திரும்பும் வழியில் சிலமணி நேரம் மட்டும் யாழ்ப்பாணத்தில் தங்கும் தமக்கு அத்தனை தடபுடல்கள் செய்யப்பட்டிருக்கும் என்று அவர் கனவிலும் எண்ணியிருக்கமாட்டார். வீதியெங்கும் மக்கள் அணிவகுப்பு என்றுதான் சொல்லவேண்டும். கும்பிட்ட கைகளைக் குலைத்துக்கொள்ளவோ அல்லது வரவழைத்த புன்முறுவலைப் பிழைத்துப்போ என்று விட்டுவிடவோ சந்தர்ப்பம் இல்லை. சங்கடமான நிலை.

## இவர்கள் அல்லவா தமிழர்கள்!

நகர மண்டபத்துள் தம்மைப் பற்றி மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பேசியதையெல்லாம் டாக்டர் பிரசாத் கேட்டபோது, தாம் உண்மையில் மேயர் வர்ணிக்கும் மனிதர்தானா என்ற ஐயம் அவருக்கு எழுந்ததோ என்னவோ! ஒருமாதிரியாக இருந்தார். தமிழ் நாட்டுத்தமிழர்களுக்குத்தான் என்னைப் பிடிக்கவில்லை. யாழ்ப்பாணத் தமிழர்கள் எவ்வளவு பக்தி விசு

வாசத்தோடு இருக்கிறார்கள்! ஆஹா, இவர்கள் அல்லவா தமிழர்கள்! என்றும் அவர் எண்ணியிருக்கலாம். நகரசபை வரவேற்புக்கு அவர் பதிலளிக்கையில் "யாழ்ப்பாணத்துக்கு நான் வராதுபோயிருந்தால் என்னுடைய இலங்கை விஜயம் பூர்த்தியாகியிருக்காது'' என்று கூறினார். இந்த ஒரே ஒரு வாக்கியத்தில் யாழ்ப்பாண மக்களின் வரவேற்பு உபசாரம் எப்படி பிரசாத்தைக் கவர்ந்தது என்பதற்கான விடை அடங்கியிருக்கிறது.

## உபசார வார்த்தைகள்

ஜனாதிபதி கலந்துகொண்ட வைபவங்களிலெல்லாம் எந்த நிலைமையிலும் சகிப்புத்தன்மை வேண்டும் என்று வற்புறுத்தியதைவிட, இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குரிய பிரச்னைகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை என்றும், இருநாடுகளும் நேசப்பான்மையோடு முன்னேற்றம் நாடிக் கடினமாக உழைக்கவேண்டும் என்றும் கூறினார்.

ஜனாதிபதிக்கு உபசார வார்த்தைகள் கூறியவர்கள் ஒரு விஷயத்தை நன்கு வற்புறுத்தினார்கள். அதாவது இந்திய சுதந்திரப் போரில் மகாத்மா காந்தி ஈடுபட்டிருந்த சமயம் அவருக்குப் பக்கத் துணையாக இருந்து பணியாற்றிய தியாகிகளில் பிரசாத்தும் ஒருவர் என்பதை ஞாபகப்படுத்தினார்கள். "இந்தியா சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்துதான் இலங்கையும் சுதந்திரம் பெற முடிந்தது''— இப்படியும் சொன்னார்கள்.

## இந்தி—சிங்களம் திணிப்பு

இந்தத் தொடர்பில் சொல்ல வேண்டிய இரண்டொரு விஷயங்கள் விடுபட்டுப்போனது குறை. "சுதந்திர இந்தியாவில் தென்னாட்டை—அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மேன்மை தங்கிய தங்களின் நேரு அரசாங்கம் அனுஷ்டிக்கும் பாரபட்சக் கொள்கையைத்தான் நமது சிங்கள பண்டா அரசாங்கமும் இங்கு பின்பற்றுகிறது. இந்தியை எல்லோருடைய தொண்டைக் குள்ளும் கரைத்து ஊற்றத் தாங்கள் அங்கு தீவிரமாக முனைந்து வருகிறீர்கள். நாமும் இங்கு அப்படித்தான் சிங்களத்தை எந்த விதத்திலும் தமிழரிடம் திணித்துவிட நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

## ஊர், வீதி பெயர் மாற்றம்

"தமிழ்நாட்டிலே உள்ள பழந் தமிழ் ஊர்களுக்கு வடநாட்டாரின் இந்திப் பெயர்கள் சூட்டி வருகிறீர்கள். 'டால்மியாபுரம்' 'சாகுபுரம்' இவற்றையெல்லாம் பிரசவித்திருக்கிறீர்கள். நாமும் விட்டோமா? தமிழ்ப் பெயர்களைத் தொலைத்துவிட்டு, அசல் தமிழ் கிராமங்களுக்கும் வீதிகளுக்கும் சிங்களப் பெயர்கள் சூட்டி வருகிறோம். தட்டாரத் தெருவை 'பண்டாரநாயக மாவத்தை' யாக்கிவிட்டோம். இன்னும் 'அக்போபுர', 'மொரவேவா'—இப்படி எத்தனையோ புதுப் பெயர்களைச் சிருஷ்டித்திருக்கிறோம்.''-இப்படிச் சொல்லிக்காட்டியிருந்தால் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள முக்கியமான ஒற்றுமைகள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும். இந்திய அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் எவ்வளவு கனகச்சிதமாக அடியொற்றி நடவடிக்கைகள் எடுத்துவருகிறது என்பது தெளிவாகியிருக்கும்.

## இந்தியர் விருந்தில் பிரசாத்

இந்திய சமூகத்தினர் ஜனாதிபதி இராஜேந்திரப் பிரசாத்துக்கு அளித்த விருந்து ஒன்றில் பேசப்பட்ட பேச்சுக்கள் கவனத்துக்குரியவையாகும்.

டாக்டர் பிரசாத் அந்த விருந்தில் இந்தியா தற்போது நாட்டின் முன்னேற்றத்துக்காக எந்த வகையில் உழைத்து வருகிறது என்பதை விளக்கிவிட்டு, இந்திய சமுகத்தினர் தாம் வாழ்ந்து வரும் நாட்டுக்குச் செய்யும் தொண்டுதான் அவர்கள் தம் தாய் நாட்டுக்குச் செய்யும் தொண்டு ஆகும் என்றார். இரு நாடுகளுக்கும் இடையில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் தொடர்பையும் நேசப் பான்மையையும் நல்லெண்ணத்தையும் வலுப்படுத்தும் வகையில் இந்திய சமுகத்தினர் தாம் பிழைக்கும் நாட்டில் உழைக்க வேண்டும் என்று சொன்னார்.

## பிரதமர் பேச்சும் சந்தேகமும்

அதே விருந்தில் பின்னால் பேசிய பிரதமர் பண்டார நாயகா, ஜனாதிபதியின் வேண்டுகோளுக்குச் செவி மடுத்து அதன்படி இந்திய சமுகத்தினர் ஒழுகவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதில் ஒரு சந்தேகம்!

இலங்கையிலுள்ள இந்திய சமுகத்தினர் இன்று இலங்கைக்குத் தம்மாலான மட்டில் உழைக்கவில்லையா? காடும் புதருமாயிருந்த மலை நாட்டில் இன்று வளம் கொழிக்கிறது என்றால், அது மீனாட்சிகளும் இராமசாமிகளும் தமது இரத்தத்தையெல்லாம் வியர்வையாகக் கொட்டி மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்ததன் பலன் தானே!

மலைநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள இந்திய வம்சாவளியினரும் வர்த்தகத்துறையில் எத்துணை கேந்திர ஸ்தானத்தை வகித்து வருகிறார்கள் என்பது ஜனாதிபதி பிரசாத்துக்கு ஒருவேளை தெரியாமலிருக்கலாம். ஆனால் பிரதமர் பண்டார நாயகாவுக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை.

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

மாநிலத்திலும் சரி, மத்ய பீடத்திலும் சரி, ஆண்டால் நாங்கள் ஆள்வோம், இல்லையேல் எப்படியும் அழிப்போம் என்கிற காங்கிரசின் ஆதிக்கப் போக்கையே, இப்போதைய நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

நல்லாட்சி, மக்களமைதி, என்பவைகளைவிட, 'காங்கிரசின் பலத்தைப் பாதுகாப்பது' என்பதே இப்போது டில்லி பீடத்தின் முக்கிய நோக்கமாகி விட்டது.

"எங்கள் நேரு! அவரது கரங்களை வலுப்படுத்துவோம்!!,'' என்றெல்லாம், சந்தர்ப்பம் வரும்போது, முழக்கமிட்ட கம்யூனிஸ்டுத் தோழர்களுக்குச் சரி[illegible] பாடத்தைப் போதிக்கிறது, டில்லி பீடம். நம்மைப் போன்ற விடுதலை விரும்பிகளுக்கும் எச்சரிக்கை வழங்குகிறது, "என்னைப்பார்! என்னை எதிர்க்க வேண்டுமானால் எவ்வளவு சக்தி வேண்டும் தெரியுமா? கட்சியைக் காக்க, நான் நீதியையும் துச்சமென மதிப்பேன்,'' என்று.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்கூட, அக்கிரமம் செய்தாலும், வெளிக்குத் தெரியாமல் செய்ய நினைக்கும்! இந்த டில்லி ஏகாதிபத்தியமோ, ஏக இந்தியா என்ற பிடிப்புடன், வெளிப்படையாகவே அக்கிரமத்துக்குத் துணிகிறது!!

**ஆபத்தான ஏகாதிபத்தியந்தான்!**

★

## அறியாமையா? நடிப்பா?

இனி, இரு தேசங்களின் நல்லுறவையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் நிலைபெறச் செய்ய எந்தச் சந்தர்ப்பத்திலாவது இந்திய சமுதாயத்தினர் தயங்கியது உண்டா? கிடையவே கிடையாது. அப்படியிருக்க அவர்களுக்குப் புதிதாக வேண்டுகோள் விடுப்பது அவர்களுடைய நிலைமையைச் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்பதையோ, அல்லது தெரிந்தும் தெரியாதவர்போல் நடித்தார் என்பதையோதான் குறிக்கும்.

பிரதமர் பண்டார நாயகா விருந்தில் டாக்டர் பிரசாத்தைப் பொறுத்த வரையிலும் ஒரு நம்பிக்கை தெரிவித்தார். டாக்டர் பிரசாத் தாயகம் திரும்பும்போது இந்த நாட்டைப் பற்றிய நல்ல நினைவுகளோடு-இன்ப அனுபவங்களோடு திரும்புவார் என்று தாம் நம்புவதாகக் கூறினார்.

## தோட்டங்கள் சிங்கள மயம்

மலைநாட்டுத் தோட்டங்களிலே பரம்பரை பரம்பரையாக வேலை செய்து பிழைக்கும் இந்திய வம்சாவழித் தமிழரின் வேலை வசதிகள் மறுக்கப்பட்டுவருகின்றன. முழுக்க முழுக்க அவர்களின் உழைப்பால் பயன்தரும் பகுதிகளாக மாறிய தோட்டங்களில் இனிமேல் அவர்களுக்குப் பதிலாகச் சிங்களத் தொழிலாளர்கள்தான் அமர்த்தப் படுவார்களாம். முதலில் இந்திய வம்சாவழித் தமிழர் இருக்கும் அளவுக்குச் சரிக்குச்சரி இலங்கை (சிங்கள) தொழிலாளர்களை நியமிக்கவும் காலக்கிரமத்தில் இந்திய வம்சாவழித் தமிழர்களை உதைத்துத் தள்ளிவிட்டு மாறாக இலங்கை (சிங்கள) தொழிலாளர்களை நியமிக்கவும் திட்டமிட்டுக்காரியமாற்றி வருகிறார்கள்.

## தமிழருக்கு வேலை மறுப்பு

இதன் பிரகாரம் இப்போது 16 வயதுக்கு மேற்பட்ட தோட்டத் தமிழ்ப் பிள்ளைகளை அந்தந்தத் தோட்டங்களில் பதிவு செய்து கொள்ளவும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவும் மறுக்கிறார்கள்.

## கல்வி வசதி இல்லை

மலைநாட்டுத் தோட்டங்களிலே வசிக்கும் மக்கள் இந்தியா சென்று திரும்ப வசதியில்லை. அவர்களின் பிள்ளைகள் வேண்டிய அளவு கல்வி அறிவுபெற வசதி இல்லை. போதிய பள்ளிக்கூடங்கள் இல்லை. இருக்கும் ஒரு சில அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும் இப்போது பெருந் தொகையான பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

## சுகாதார வசதி இல்லை

சுகாதார வசதிகள் அவர்களுக்கு இல்லையென்றே சொல்லிவிடலாம். அவ்வளவு மோசம்! தோட்டங்களில் உள்ள சுகாதாரச் சீர்கேட்டுக்கு அத்தாட்சியாகக் கடந்த சில வருடங்களாக அங்கு சிசு மரணங்கள் அதிகரித்து வருகின்றன. அரசாங்கமே இந்த விவரத்தை வெளியிட்டு இருக்கிறது.

## பிரஜா உரிமை வழங்க மறுப்பு

எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய வம்சாவழித் தமிழருக்கு பிரஜா உரிமைவழங்குவது சம்பந்தமாகக் கொடுமைக்கு மேல் கொடுமை இழைக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள சுமார் 10 இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழரில் சுமார் 1 இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கோ 50 ஆயிரம் பேருக்கோதான் இதுவரை பிரஜா உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இலட்சக் கணக்கானோரின் பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நிராகரிக்கப்பட்ட மனுக்கள் சம்பந்தமாக நீதிமன்றங்களில் அப்பீல்கள் தாக்கல் செய்யப்பட்டதில், பலர் பிரஜா உரிமை பெறுவதற்கு யோக்கியதை உடையவர்களே என்றும், அவர்களின் மனுக்கள் அநியாயமாக நிராகரிக்கப்பட்டு விட்டன என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே. அரசாங்கத்தின் மனோபாவம் இங்கே பளிச்சிடுகிறது.

## அக்கிரமம்

திடீர்திடீர் என்று பலர் 'கள்ளத் தோணி'கள் என்று கைதுசெய்யப் படுகிறார்கள். வாசகால பர்மிட் பெறுவதற்கு யோக்கியதை உடையவர்கள்கூட அதற்குப் பகிரதப் பிரயத்தனம் எடுக்கவேண்டியிருக்கிறது. மேற்படி பர்மிட் வழங்குவதற்கான விசாரணைக்கென்று அரசாங்க அலுவலகங்களுக்குஅழைக்கப்பட்டுப் பலர் தந்திரமாகக் கைது செய்து செல்களில்போட்டு வாட்டி வதைக்கப்பட்ட பின்னர் திருப்பி அனுப்பப்பட்டு விடுகிறார்கள் இந்தியாவுக்கு — இதுதான் இன்று இங்குள்ள நிலைமை. ஆயினும் நல்ல நினைவுகளோடு இன்ப அனுபவங்களோடு டாக்டர் பிரசாத் தாய்நாடு திரும்புவார் என்று நம்பிக்கை தெரிவித்தார் பிரதமர் பண்டாரநாயகா.

## பந்தம் பிடித்தால் போதுமா?

இந்திய வம்சாவழியினருக்கு செய்யக்கூடிய துரோகம் எல்லாவற்றையும் ஒன்றுமாறி ஒன்றாகச் செய்துவிட்டு, ஜனாதிபதி இராஜேந்திரபிரசாத்துக்கு இராஜ வரவேற்புக் கொடுத்து அவருக்குப் பின்னால் திரிந்து பந்தம் பிடித்துவிட்டால், "தங்களையே பின் பற்றுகிறோம் பிரபு" என்று பணிந்து கூறிவிட்டால், இரண்டு நாடுகளுக்குமிடையிலுள்ள நீண்ட நாள் தொடர்பை நினைவுபடுத்திவிட்டால், இராணி மாளிகையில் வைத்து இனிக்க இனிக்கப்பேசி விட்டால் போதுமா?

## விருந்தாளிக்கு கோழிக் கறி

விருந்தாளி ஒருவர் வீட்டுக்கு வந்துவிட்டால், "நம்ம வீட்டுக் கோழிசார் இது! நீங்கள் ஒருமாதக் குஞ்சாகத்தந்தது. கொழு கொழு என்று இருக்கிறது அல்லவா!" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டே அதன் கழுத்தில் கத்தியை வைப்பார்கள். கோழி சிறகடித்துத் துடித்து உயிருக்காக மன்றாடுவதைப் பற்றி விருந்தாளிக்குச் சிறிதும் கவலை ஏற்படுவதில்லை. காரமான கோழிக் கறியை ஆர அமர இருந்து சுவைத்துவிட்டு, "பிரமாதம், விருந்து பிரமாதம்! கோழிக்கறி தேவாமிர்தம்!!" என்று பாராட்டு வழங்குவார்.

## அவர் டில்லி விருந்தாளி

இலங்கைத் தமிழர்களைவிட்டுத் தள்ளுங்கள் தற்போதைக்கு. டாக்டர் பிரசாத்தைக் கௌரவ விருந்தாளியாக வரவேற்ற அதே சமயத்திலும் இலங்கை அரசாங்கம் இந்திய வம்சாவழித் தமிழனின் கழுத்தில் வைத்த கத்தியைச் சிறிதும் தளர்த்தவில்லை. ஆயினும் டாக்டர் பிரசாத் இலங்கை அரசாங்கத்தையும் மக்களையும் வாயாரப் பாராட்டி விட்டுச் சென்றுவிட்டார். "நல்ல நினைவோடு செல்கிறேன்" என்று சொல்லிவிட்டே சென்றிருக்கிறார். ஆமாம், அவர் நமக்கு டில்லியிலிருந்துவந்த விருந்தாளியாயிற்றே! ✻